1997ல் ஆரம்பித்து 10வது ஆண்டில் காலடி வைக்கிறது

www.tamilarangam.net

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் □ இதழ் 30 □ ஜனவரி 07 - பெப்ரவரி 07 □ ISSN 1474 - 8770 □ www.thesamnet.com

**சர்வதேச மூலதனம் இலங்கையில் ஏற்படுத்தும் தாக்கம்**





**வந்து போகும் காலக் கேடுகளும் வராமலே போகும் தமிழீழமும்**





## ஹிஜாப் தடையும் ஸ்லாமோபோபியாவும்

தமிழ் – முஸ்லீம் இன உறவுக...

**கலந்துரையாடல்**

தேசம் வாசகர் அவர்களுக்...

**உங்களுக்கான விசேட அழைப்பித...**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

காலம் : 10 மார்ச் 2007 நேரம் : மாலை 2:30 மணி முதல் மாலை 7 மணி...

www.tamilarangam.net

# Low Cost Accomodations in London

## Finchley Rd, Archway, Holloway Rd Tube Stations அருகாமையில்

☆ Flats

☆ Studios

☆ Rooms

நூற்றுக்கும் மேற்பட்ட வதிவீடங்கள் வாடகைக்கு உண்டு.

சில நிமிடத்தில் சென்றடையக் கூடியதான போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடம்.

**மாத வாடகை £400 - £600**

குறிப்பு : மாத வாடகையுடன் ஒரு மாத வாடகை முற்பணமாக செலுத்த வேண்டும். கவுன்சில் ரக்ஸ் மற்றும் கட்டணங்களை குடி இருப்பாளர்களே செலுத்த வேண்டும். மாதாந்த வாடகையை வங்கிக் கட்டளை - Standing Order மூலம் செலுத்த வேண்டும். D.S.S ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

Tel \ Fax : 020 8905 0452

Email : tarrin@desilugroup.com

Web : www.desilugroup.com

Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of Companies

Collingwood Business Centre, Mercers Rd, London N19 4PU

www.tamilarangam.net

உள்ளே

01 தேசத்தின் பார்வை: தம்பிக்கு கேட்குமா விக்கிரமபாகு ஊதுகிற சங்கு

02 சர்வதேச மூலதனம் இலங்கையில் ஏற்படுத்தும் தாக்கம்
**கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்னா**

07 ஹிஜாப் தடையும் ஸ்லாமோபோபியாவும்
**சேனன்**

10 எனது அனுபவப் பார்வையில்: தமிழ் - முஸ்லீம் உறவுகளும் எதிர்காலமும்
**எஸ் பாலச்சந்திரன்**

14 வந்து போகும் காலக்கேடுகளும் வராமலே போகும் தமழீழமும்
**ரி கொன்ஸ்ரன்ரைன்**

16 தமிழர்களின் போராட்டத்தை அங்கீகரித்த பெரும்பான்மையினத் தலைவர்
**வே சிவராஜா**

20 சங்கரியுடன் ஒரு அலசல்
**த ஜெயபாலன்**

28 துருக்கிமினிஸ்தானின் சர்வதிகாரியின் மரணம்

30 உற்பத்தி அரசியல்: இந்திய விவசாயிகளைக் கொள்ளையடிக்கும் பன்னாட்டு நிறுவனங்களும் விலைபோகும் விஞ்ஞானிகளும்
**ச வேலு**

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 208 905 0452
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# தம்பிக்கு கேட்குமா !!! விக்கிரமபாகு ஊதுகிற சங்கு

வி.புலிகள் ஆயுதங்களில் மட்டும் தங்கி இராமல் தங்களது போராட்ட வடிவங்களை மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியம் இப்பகுதியில் பல தடவை வலியுறுத்தப்பட்டது. அதனை தற்போது சுறாவளிப் பிரச்சாரத்தை மேற்கொண்டிருக்கும் நவ சமசமாஜிக் கட்சித் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ணாவும் சுட்டிக்காட்டி இருக்கிறார்.

''தற்போதைய போக்கு உலகப் போக்கு எல்ரிரிஈ க்கு புதிய சவாலாக அமைந்துள்ளது. அவர்கள் இதனை விளங்கிக் கொண்டு புதிய பாதையில் செல்ல வேண்டும். உலக முதலாளித்துவத்திடம் சென்று கெஞ்சுவதை விட்டுவிட்டு உழைக்கும் மக்களிடம் வர வேண்டும். தென்னிலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் அதனைச் செய்ய வேண்டும். மார்க்ஸிய கொம்யூனிஸ்ட் கட்சிகளுடன் இணைந்து செயற்பட வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டுள்ளார் விக்கிரமபாகு.

வி.புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரைகளுக்கு விளக்கம் அளிக்கையிலும், தனது நூலிலும் சில இடதுசாரித் தத்துவங்களை மறைந்த வி.புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் துணைக்கு அழைத்ததைத் தவிர; வி.புலிகளுக்கும் இடதுசாரிக் கோட்பாடுகளுக்கும் தொடர்பை தேடிக்கொள்வது மிகவும் கடினம்.

சிங்கள முற்போக்கு சக்திகளை கூட்டணியின் வழித்தோன்றல்களான வி.புலிகள் என்றுமே ஒரு பொருட்டாக எண்ணியதில்லை. வி.புலிகளைப் பொறுத்தவரை இம்முற்போக்கு சக்திகள் செல்லாக் காசுகள். இலங்கையாக இருந்தாலென்ன இந்தியாவாக இருந்தாலென்ன வேறெந்த நாடாக இருந்தாலென்ன வி.புலிகளின் உறவுகள் ஆளும் வர்க்கத்துடனேயே இருந்தது. யாருக்காகப் போராடுகிறார்களோ அவர்களிலும் பார்க்க ஆயுதங்களில் அதீத நம்பிக்கை உடையவர்கள் வி.புலிகள். கொழும்பில் இருந்தே கேட்காதபோது லண்டனில் வந்து நின்று 'உழைக்கும் மக்களிடம் வர வேண்டும்' என்று விக்கிரமபாகு அழைப்பது கேட்குமா என்பது கேள்விக்குறியே.

இனமுரண்பாடுகளை கூர்மையாக வைத்திருப்பதன் மூலமே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தக்க வைக்க முடியும் என்று வி.புலிகள் நம்புகின்றனர். மறுதலையாகக் கூறினால் இன உறவுகளை வலுப்படுத்துவது போராட்டத்தை பலவீனப்படுத்தும் என்பது அவர்களது முடிவான நம்பிக்கை. இன்றுவரையான போராட்ட வரலாற்றில் இருந்து வி.புலிகள் எதனையும் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. அப்படி அவர்கள் கற்றுக் கொண்டிருந்தால் 'உழைக்கும் மக்களிடம் வர வேண்டும்' என்ற இந்த அழைப்பை லண்டனில் விடுவதற்குப் பதிலாக கலாநிதி விக்கிரமபாகு கிளிநொச்சியில் விட்டிருப்பார். கிளிநொச்சியில் இருந்து தான் விட்டிருக்க வேண்டும்.

விரும்பியோ விரும்பாமலோ ஈழத் தமிழர்களுடைய எதிர்காலம் வி.புலிகளின் கையிலே குறிப்பாக அதன் ஒட்டுமொத்த தலைவர் வே பிரபாகரனின் கையிலேயே உள்ளது என்றும் கொள்ளலாம். அதனை இலங்கை அரசின் நடவடிக்கைகள் தொடர்ந்தும் உறுதிப்படுத்துகிறது. ஆனால் அந்நியப்பட்டு நின்று போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. சிங்கள, முஸ்லீம், தமிழக மற்றும் சர்வதேச முற்போக்கு சக்திகளின் ஆதரவு அவசியம். அதுவே பலம். அந்த ஆதரவு இருந்திருந்தால் இன்று வி.புலிகள் வன்னிக்குள் அந்நியப்பட்டிருக்கமாட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன** (தலைவர்: நவ சமசமாஜக் கட்சி)

# சர்வதேச மூலதனம் இலங்கையில் ஏற்படுத்தும் தாக்கம்

பெப்ரவரி 4, இலங்கையின் சுதந்திர தினம். இராணுவத்தால் சூழப்பட்ட அரசின் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் சுதந்திரமான மக்கள் இன்றிக் கொண்டாடப்பட்டது. எனது கருத்துப்படி நாங்கள் சுதந்திரமானவர்கள் அல்ல. நாங்கள் உலக முதலாளித்துவ அதிகாரத்தின் கீழ் உள்ளோம். நாங்கள் கடனாளிகளாக உள்ளோம். இந்த முதலாளித்துவ அதிகாரிகள் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்கிறார்கள். அவர்கள் பொருளாதாரம், நாட்டின் அபிவிருத்தி மட்டுமல்ல அரசியலையும் அவர்களே தீர்மானிக்கின்றனர். இலங்கையில் உள்ளது ஒரு பொம்மை அரசாங்கம். உலக முதலாளிகளுக்கு என்ன தேவையோ, என்ன எதிர்பார்க்கிறார்களோ அதையே இந்த அரசாங்கம் செய்கிறது. இது நாங்கள் இழந்த சுதந்திரத்தின் ஒரு பக்கம். முடிவுகளை எடுக்கும் எம்மவர்கள் பொரளாதார கோணத்திலும் அரசியல் கோணத்திலும் உலக அதிகாரசக்திகளால் உருவாக்கப்படுகிறார்கள்.

அடுத்து தேசிய சட்டங்களால், சமூக சட்டங்களால் மக்களது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களும் கட்டுப்பட்டு உள்ளது. இந்த சட்டங்களின் பெயரில் ஜனநாயகம் மறுக்கப்படுகிறது. சுதந்திரம் அடைந்ததில் இருந்து அனைத்து தேசிய இனங்களையும் இணைக்கக் கூடியதான அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்க நாங்கள் தவறியுள்ளோம். தோல்வியைக் கண்டுள்ளோம். அதனால் இனங்களின் சிறைக்கூடமாக இலங்கை உள்ளது. தமிழர்களுக்க எதிரான கொடிய சட்டம், இனவாதச் சட்டம் தொடர்கிறது.

நாங்கள் எங்கள் சுதந்திரத்தை இழந்துள்ளோம். சுதந்திரம் அடைந்தது முதல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையிலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலும் கூட்டணிகள் ஆட்சிக்கு வந்தன. அதனால் அவர்களே இதற்குப் பொறுப்பு. மேலும் பழைய இடதுசாரிகளும் மக்களை மோசமான நிலையில் கைவிட்டார்கள். ஆகவே எனது நாட்டில் மக்கள் சுதந்திரமின்றி இருப்பதற்கு இவர்கள் எல்லோரும் பொறுப்பு.

ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே சிறு வேறுபாடு இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சி மூலதனத்திற்கானது, மாற்றத்தை விரும்பாதது, கொழும்பில் உள்ள ஆங்கிலம் பேசும் சிறு அதிகாரக் குழுவிற்கு சேவகம் செய்தது. மறுபக்கத்தில் ஸ்ரீறிலங்கா சுதந்திரக்கட்சி தேசிய ஆர்வலர்களுக்கு கை கொடுப்பதாக முன் வந்தது. பௌத்த சிங்கள கிராமப்புற மக்களை கவர்ந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி நலன்புரி அரச அமைப்பை (welfare state) ஏற்படுத்துவதாகத் தெரிவித்தது. இது பிரபல்யமான திட்டம். அதனால் இரு கட்சிகளின் பொருளாதாரத் திட்டங்களிடையே வேறுபாடு இருந்தது.

காலங்கள் கடந்து உலக அளவில் ஏற்பட்ட மாற்றங்களால், புதிய லிபிரல் திட்டங்களின் வளர்ச்சியால், உலக மூலதனத்தின் தாக்கத்தால் இரு கட்சிகளும் ஒரே திட்டத்தையே பின்பற்றுகின்றன. தேசிய இனப் பிரச்சினையைப் பொறுத்தவரை தற்போது அவர்களிடையே வேறுபாடு உள்ளது.

தமிழ் மக்கள் ஜனநாயக வழிகளில் தமது தேசிய இனப் பிரச்சினைக்கான கேள்வியை எழுப்பியபோது அது அடக்கப்பட்டது. ஒவ்வொரு தடவையும் உறுதி வழங்கப்பட்ட போதும் அடுத்த கட்டத்தில் அது கைவிடப்பட்டது. எழுபதுக்களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இடதுசாரிகளுடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இணைந்து ஆட்சிக்கு வந்தபோது அவர்கள் தமிழ் மக்களின் குரல் இல்லாமலேயே அரசியல் அமைப்பை உருவாக்கினர். அவர்கள் பௌத் சிங்கள அதிகாரத்துடன் அரசியலமைப்பை உருவாக்கினர். பௌத்த மதத்திற்கும் சிங்கள மொழிக்கும் விசேட அந்தஸ்து வழங்கப்பட்டு ஒருமைத்துவ (Unitary State) நாடாக இலங்கையை உருவாக்கினர். இந்த அரசியல் அமைப்பை 'இரு மொழி ஒரு நாடா அல்லது ஒரு மொழி இரு நாடா' என்று கேட்ட கொல்வின் ஆர் டி சில்வா உருவாக்கினார். மனித உரிமைகளுக்காக, தேசிய உரிமைகளுக்காக மற்றும் அனைத்து உரிமைகளுக்காகவும் போராடிய அவர் பின்னர் அவற்றை மறந்து விட்டார். அது மட்டுமல்ல இனவாதத் தரப்படுத்தலையும் அறிமுகப்படுத்தினார்.

மிக மோசமான பாரபட்சத்தை தமிழ் இளைஞர்கள் மத்தியில் இது ஏற்படுத்தியது. இதுவே ஆயுதக் கவர்ச்சிக்கும், ஆயுத வன்முறைக்கும் வித்திட்டது. ஏனென்றால் தமிழ் மக்களுக்கு போவதற்கு வேறு வழி இருக்கவில்லை. இந்நிலைக்குள் தமிழர்கள் தள்ளப்பட்டனர். அதற்கு இடதசாரித் தலைமைகளும் காரணமாக இருந்துள்ளது.

1972ல் இவ்வாறான சட்டங்களை கொண்டுவந்த பொழுதே அதன் இனவாதத் தன்மையைச் சுட்டிக்காட்டினேன். நான் கட்சியில் இருந்து தூக்கி எறியப்பட்டேன். அதனைத் தொடர்ந்து நாங்கள் புதிய கட்சியை நவ சமசமாஜக் கட்சியை ஆரம்பித்தோம். இது ஒரு பெரிய கட்சி அல்ல. ஆனால் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற கட்சி. எங்கள் குரல்கள் மற்றவர்களால் கருத்திற்கு எடுக்கப்படுகிறது. அதிகாரப் பரவலாக்கம் அவசியம் என்பதை நான் 1974இலேயே குறிப்பிட்டு அதற்காக பிரச்சாரம் செய்தேன். சுயநிர்ணய உரிமை, தமிழ் மக்களக்கு சுயாட்சி இவற்றுக்காக அப்போதே குரல் எழுப்பினோம். அப்போது எல்லோருமே எங்களுக்கு எதிராக இருந்தார்கள். ஆனால் இறுதியில் இவர்கள் அதனை ஏற்றனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரப் பரவலாக்கம், பிரதே சுயாட்சி என்கிறது. யுஎன்பி ரணில் விக்கிரமசிங்க சமஸ்டிக்காக பிரச்சாரம் செய்தார்.

மகிந்த ராஜபக்சவின் தேர்தல் பிரச்சாரத்தை எடுத்தால் அவர் மூன்று முரண்பட்ட பிரச்சாரத்தை மேற்கொண்டார். சிங்கள இனவாதக் கட்சிகளான ஜேவிபி, ஹெலஉருமய இரண்டும் ஒருமைத்துவத்திற் காகவும், சிங்கள - பௌத்த மேலாதிக்கத்திற்காகவும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்க யுத்தத்தை தொடர வேண்டியும் பிரச்சாரம் செய்தன. ஜேவிபிக்கும் ஹெல உருமயவுக்குமிடையே வேறுபாடுகள் உண்டு. ஹெலஉருமய ஒரு முதலாளித்துவக் கட்சி. அவர்கள் புதிய லிபரல் கொள்கையை கடைப்பிடிப்பவர்கள். இவர்கள் அமெரிக்காவையும் உலக முதலாளித்துவத்தையும் பின்பற்றுபவர்கள். ஆனால் ஜேவிபி ஏழை மக்களின் கட்சி. கிராமப்புற பௌத்த சிங்களவர்களின், படித்த சிங்கள கிராமப்புற இளைஞர்களின் கட்சி. அதனால் ஜேவிபி ஒரு சமூக அழுத்தத்தை பிரதிநிதித்துவ ப்படுத்துகிறது. ஆயினும் அவர்கள் இந்த சமூக அழுத்தத்தை ஒருமைத்துவத்திற்காகவும், சிங்கள - பௌத்த மேலாதிக்கத்திற்காகவும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழிக்க யுத்தத்தை தொடரவுமே பயன்படுத்துகிறார்கள்.

இந்த பேரினவாத பிரச்சாரத்தை மகிந்த ராஜபக்ச சிங்கள பெரும்பான்மையின மக்கள் மத்தியில் பயன்படுத்திக் கொண்டார். மகிந்த ராஜபக்ச தனது பிரச்சாரத்தில் தமிழ், முஸ்லிம் மக்களுடன் கலந்துரையாடப்படும் என்றும் குறிப்பிட்டார். இந்த சிங்கள் பௌத்த அரசியல் அமைப்பிற்குள் ஒருமைத்துவ அமைப்பிற்குள் எப்படி தமிழ், முஸ்லிம் மக்களை கொண்டு வருவது என்பதைப் பற்றித் தான் அவர் கலந்துரையாடத் தயாராய் உள்ளார். அந்த கலதுரையாடலுக்குத் தான் எல்ரிரியை மகிந்த ராஜபக்ச அழைக்கிறார்.

மேலும் சமூக மாற்றத்திற்கான பிரச்சாரமும் மேற்கொள்ளப்பட்டது. புதிய லிபரல் பொருளாதாரக் கொள்கைகளை நிறுத்த, வளங்களைப் பேண, அரசுடமைகளை சர்வதேச நிறுவனங்களுக்கு விற்பதைத் தடுக்க, தொழிற்சங்க உரிமைகளைப் பேண, மனித உரிமைகளைப் பேண இந்த சமூக மாற்றத்திற்கான பிரச்சாரம் பழைய இடதுசாரிகளாலும் ஜேவிபி இனராலும் மேற்கொள்ளப்பட்டது. அதனையும் மகிந்த ராஜபக்ச பயன்படுத்திக் கொண்டார்.

பலர் அதனை நம்பினர். எனது நண்பர் வாசதேவாவும் நம்பினார். மகிந்த ராஜபக்ச எனது நண்பரும் கூட. நாங்கள் இருவரும் பிரேமதாச காலத்தில் ஜேவிபி உறுப்பினர்கள் காணாமல் போவது போன்றவற்றுக்கு எதிராக கத்தரகமவுக்கு அணிவகுத்துச் சென்றோம். அதுமட்டுமா கொலைகளை நிறுத்தும்படி மேற்குலக நாடுகள் தலையிட வேண்டும் என்று கேட்டு மகிந்த ராஜபக்ச எனது செயலாளருடன் ஜெனிவாவிற்கு சென்றார். மகிந்த எனது தாயாரின் மரணச் சடங்கில் கலந்தகொண்ட நாள் முழுவதும் அங்கிருந்தார். நல்ல மனிதர். அவர் எப்படி மாறுவார் எனப் பலர் சொன்னார்கள். வாசுதேவாவும் கூறினார்.

அனால் மகிந்த அதிகாரத்திற்கு வந்ததும் அவர் சமூகத்திற்கு, தொழிற்சங்கங்களுக்கு எதிராகத் திரும்பினார். இனவாதிகளுக்கு அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றினார். உண்மையான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுத்தத்தை ஆரம்பித்தார். தொலைவிலிருந்து கொண்டே விமானங்கள் மூலம் கிராமங்களை அழித்தார். விடுதலைப் போராட்ட நடவடிக்கைகளை அழித்தார். இது மகிந்த ராஜபக்சவின் கொள்கை அல்ல. இது இலங்கைத் தலைவர்களின் கொள்கை அல்ல.



அமெரிக்காவினாலும் மேற்குலகினாலும் உருவாக்கப்பட்ட சர்வதேசக் கொள்கை. எதற்கெதிராக மகிந்த ராஜபக்ச (படம்) அன்று அணிவகுத்துச் சென்றாரோ இன்று படுகொலைகளும், காணாமல் போவதும் நாடு முழுவதும் தொடர்கிறது. இது அரசகட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள உயர்பாதுகாப்பு வலயத்தில் இடம்பெறுகிறது.

இந்த யுத்தத்தை ஆரம்பித்தது மட்டுமல்ல இந்த யுத்தத்தைப் பயன்படுத்தி தொழிற்சங்கங்களையும் மற்றைய அமைப்புகளையும் ஒடுக்கவதற்கும் இந்த யுத்தத்தைப் பயன்படுத்தினர். தொழிற்சங்கங்கள் தமது பொருளாதார உரிமைகளுக்காகவும் நலன்களுக்காகவும் போராடும் போது அரசாங்கம் தேசிய பாதுகாப்பு சட்டங்கள் மூலம் இந்த தொழிற்சங்கப் போராட்டங்கள் பயங்கரவாதத்திற்கு துணைபோவதாக நடவடிக்கை எடுக்கும். ஊடகங்களையும் இந்தச் சட்டங்கள் ஆளுமை செய்கின்றது. அரசாங்கத்திற்கு எதிரான செய்திகள் வரும்போது இந்த ஊடகங்கள், அதன் நிருபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை கைது செய்கிறது. படுகொலை செய்கிறது. இந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொண்ட உலக முதலாளித்துவ வாதிகள் சமூகக் கிளர்ச்சிகளைக் கையாள முடியாத நிலையிலேயே இவையெல்லாம் ஏற்படுகின்றது.

காலியில் இடம்பெற்ற உலக நாடுகள் சந்தித்துக் கொண்ட Sri Lanka Development Forum இல் U S $ 4.5 பில்லியனை இலங்கைக்கு வழங்க முடிவெடுத்தனர். அவர்கள் எல்லோரும் சமாதானம் வேண்டும் என்று சொன்னார்கள். ஏன் ? 5 விதமாக இருக்க வேண்டிய இலங்கையின் பொரளாதார வளர்ச்சி 3.5 விதமாக உள்ளது. இலங்கையின் பொருளாதார வளர்ச்சியை ஏதாவது சமாதானம் வந்தால் 8 வீதமாக உயர்த்தலாம் என்பதற்காக. சமாதானத்திற்கு கட்டாயம் முயற்சிக்க வேண்டும். சமாதானம் மிக ஆவசியம். என்றெல்லாம் சொல்லிவிட்டு அரசாங்கத்திற்கு எந்த நிபந்தனையும் வழங்காமல் U S $ 4.5 பில்லயனை வழுங்க கையெழுத்திட்டு உள்ளனர். பொரளாதார வளர்ச்சித் திட்டங்களுக்காகவே அவர்கள் சமாதானம் வேண்டும் என்கின்றனர். Economic Agenda. அதிலேயே அவர்கள் ஆர்வமாய் உள்ளனர்.

இந்த யுத்தம் சிங்கள தேசிய வாதத்தினால் மேற்கொள்ளப்படுகிறது என்று எண்ணிவிடாதீர்கள். உலக முதலாளித்துவத்தின் ஆதரவில்லாமல் மகிந்த ராஜபக்சவால் ஒரு நாள் கூட நின்று பிடிக்க முடியாது. இன்றைக்கு இந்த அரசியல்வாதிகள் எல்லோரும் அவருக்குப் பின்னால் ஓடுகிறார்களே ஏன் ? இவர்கள் எல்லோரும் தேசிய யுத்த எதிர்ப்புப் போராட்டத்தில் என்னுடன் கலந்து கொண்டவர்கள். கோஸமிட்டு சம்ஸ்டியை கேட்டவர்கள். மறுநாள் அவர்கள் அமைச்சர்கள். ஏன் ? என்று கேட்டேன் அதற்கு சொன்னார்கள் "நாங்கள் தேசிய யுத்த எதிர்ப்பைக் கைவிடவில்லை, தாங்கள் அதற்கு அழுத்தம் கொடுக்கப் போகிறோம்" என்றார்கள்.

ஜேவிபி தலைவர்கள் அரசாங்கத்தை விட்டு ஓடினார்கள் ஏனென்றால் இது அவர்களுடைய பொருளாதாரக் கொள்கை அல்லவே. மகிந்த ராஜபக்ச கூறியது வேறொன்றல்லவா? அதனால் தானே எனது நண்பர் வாசுதேவாநாணயக்கார அங்கு நிற்கிறார். அவர் ஒரு வகை சமூக மாற்றம் ஏற்படும் என்றல்லவா அங்கு போய் நிற்கிறார்.

வடக்கு கிழக்கில் மட்டுமல்ல தெற்கிலும் மக்களுடைய இரத்தத்திலும் துன்பத்திலுமே இதெல்லாம் நடைபெறுகிறது. மகிந்த சமாதானத்தை கொண்டுவருவார் என்றே அவரைப் பலப்படுத்தினர். அதில் நிபந்தனையில்லை. தமிழ் பேசும் மக்களுடைய சுயாட்சியைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை.

இப்போது ரணிலுடைய பொருளாதாரக் கொள்கைகளை, அரசியல் கொள்கைகளை மகிந்த எடுத்துக் கொண்டுவிட்டார். ரணிலுக்குப் போவதற்கு ஒரு இடமும் இல்லை. கட்சி மிகவும் நெருக்கடியில் உள்ள நிலையில் அதற்குப் பின்னுக்கு இழுபட்டுச் செல்வதே வழி. ரணிலும் மகிந்தவின் அணியில் சேரவே விரும்பினார். ஆனால் ரணிலின் கூட்டத்தினர் அதற்கிடையே குறுக்கால் பாய்ந்து சென்றுவிட்டார்கள்.

இப்போது ஜேவிபியையும் ஹெலஉருமயவையம் எடுத்தால், ஹெலஉருமய மிகவும் மகிழ்ச்சியாக உள்ளனர். அவர்கள் ஏற்கனவே பதவிகளையும் ஏற்றுக்கொண்டு விட்டனர். நான் நினைக்கிறேன் இந்த விளையாட்டில் இவர்களே உண்மையில் வெற்றி பெற்றுள்ளனர். சம்புக்க ராணவக்க தேர, எங்களுடைய நாட்டின் சின்ன ஹிட்லர் இவர். இவரைப் பொறுத்தவரை அதிகாரத்தில் இருப்பது அவருக்கு நல்ல சந்தர்ப்பமாய் அமைந்துவிட்டது. அவருடைய எண்ணப்படி விடயங்களை செய்யலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் ஜேவிபி சிக்கலில் உள்ளது. ஏனென்றால் அவர்கள் ஏழைகளின் கட்சியாக இருக்க விரும்புகிறார்கள். அவர்களுக்கு சிவப்புக் கொடி வேண்டும். அதே நேரம் இதையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு உலக முலாளிகளுடனும் ஏகாதிபத்திய வாதிகளுடனும் அல்ல தமிழர்களுடன் சண்டை பிடிக்கச் சொல்கிறாரகள். தமிழர்கள் அவர்களுக்கு அமெரிக்க முதலாளித்துவத்திலும் மோசமானவர்கள். ஏன் ? என்று எனக்குத் தெரியவில்லை. இது அவர்களுடைய புதிய மார்க்ஸிச சித்தாந்தம். அவர்கள் மார்க்ஸிசம் படித்தவர்கள் என்று நான் நம்பவில்லை.

ஹெலஉருமய அமெரிக்காவுடைய மேலாதிக்கத்தை ஏற்கிறது. அவர்கள் அரசாங்கத்தில் இருந்து கொண்டு சிங்கள பேரினவாத கொள்கைகளை அமுல்படுத்துகின்றனர். சமூக அழுத்தம் ஜேவிபியை அரசில் இருந்து வெளியேறும்படி செய்தது. ஆனால் அவர்களால் படித்த சிங்கள இளைஞர்களை கட்டி வைத்துள்ள சிங்கள பேரினவாதக் கொள்கைகளில் இருந்து விடுபட முடியவில்லை. அதனால் ஜேவிபி சிக்கலில் உள்ளது. இந்நிலை நீண்டகாலம் நிலைக்காது.

எந்த தமிழரும் மகிந்த ராஜபக்சவுடன் பேசுவதை விரும்பமாட்டார்கள். இவர் தமிழரின் தாயகப் பிரதேசங்களைப் பிரித்துள்ளார். தமிழ் மக்களை துன்பத்திற்குள்ளாக்கி உள்ளார். யாரும் அவருடன் பேசச் செல்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. அவர் எல்ரிரியை பேசுவதற்கு அழைக்கிறார். எல்ரிரிஈ தலைவர்கள் பேசுவதற்குச் சென்றால் எல்ரிரிஈ உடைந்துவிடும். ரிஎன்ஏ தலைவர்கள் பேசச் சென்றால் அதனுடைய அரசியல் எக்காலத்திற்கும் மீளமுடியாதபடி கழுவிச் செல்லப்பட்டு விடும்.

முஸ்லீம் காங்கிரஸ் புதிய லிபிரல் கொள்கைகளுக்கு எப்போதும் விசுவாசமாகவே உள்ள ஒரு முதலாளித்துவக் கட்சி. அதுவுமே தமிழ் தாயகத்தை பிரிப்பதற்கு எதிராகவே உள்ளது. ''தமிழர் தாயகத்தை பிரிக்க முடியாது. தமிழர்களுடன் நட்புறவாக இருக்கவே விரும்புகின்றோம்'' என்றனர். அவர்களும் போய் மகிந்தவுடன் சேர்ந்து கொண்டனர். அவர்கள் வீதியில் மட்டுமே அமெரிக்கர்களுக்கு எதிர்ப்பு. பணம் எங்கு இருக்கிறதோ அவர்கள் அங்கு இருப்பார்கள். இஸ்ரேல் குண்டு பொழியும் போதும், சாதம் எனும் போதும் அவர்கள் என்னுடன் இருப்பார்கள். பணம் அமெரிக்காவில் இருந்த வருகிறது என்றதும் அவர்கள் எல்லோரும் அங்கிருப்பார்கள்.

இங்கு வலுவான தொழிலாளர் போராட்டம் இடம்பெற்றதை நீங்கள் ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். துறைமுகத் தொழிலாளர் போராட்டம், மின்சாரத் தொழிலாளர் போராட்டம், பெற்றோலியத் தொழிலாளர் போராட்டம், மலையகத் தொழிலாளர் போராட்டம் என்பவை குறிப்பிடத்தக்கன. ஒரு நாளைக்கு முன்னூறு ரூபாய் சம்பளம் கேட்டனர். நினைத்துப் பாருங்கள் ஒரு குடும்பத்திற்கு 300 ரூபாய். எப்படிப் போதும். அதனைக் கொடுக்க முடியாவிட்டால் அவர்களுக்கு காணிகளைக் கொடுங்கள் என்று நாங்கள் சொன்னோம். அதில் பயிரிட்டு அவர்கள் பிழைத்துக் கொள்வதுடன் அரசாங்கத் திற்கு வரியும் செலுத்துவார்கள். அந்த நிலம் மலையகத் தொழிலாளர்களுக்குச் சொந்தமானது. அவர்கள் அந்நிலத்தை விருத்தி செய்தனர். தனியார் நிறுவனங்கள் அரசாங்கத்திடம் இருந்து கடன்வாங்கி அரசகாணிகளை வாங்கினர். இந்த நிறுவனங்களுக்கு சம்பளம் வழங்க முடியாவிட்டால் நிலத்தை திருப்பித் தரட்டும். இந்த தொழிலாளர் போராட்டம் தொடர்கிறது.

அதைப்பற்றி பிரச்சினையில்லை. ஆறுமுகம் தொண்டமான் அரசாங்கத்தில் இணைந்துள்ளார். ஏனென்றால் இந்தியா அவருக்கச் சொன்னது. உங்களுக்குத் தெரியுமா நீங்கள் எல்லோரும் இந்தியாவை நம்பினீர்கள். இந்தியத் தாய். அன்னை இந்திரா, வாருங்கள் என்றெல்லாம் சொன்னீர்கள். அவர்கள் இந்திய இராணுவத்தை அனுப்பினார்கள். என்ன நடந்தது. நீங்கள் துரத்த வேண்டி வந்தது. இன்று அவர்களுடைய கொள்கை என்ன? இந்திய பிரதமர் மன்மோகன் சிங் உலக முதலாளிகளின் ஆலோசகராக இருக்கிறார். அவர் ஜோர்ஜ் புஸ், ரொனி பிளேயர் போன்றவர்களுக்கு ஆலோசகர். அவர்கள் உலக முதலாளித்துவத்தின் பண்டிதர்கள்.

**நாங்கள் உலக முதலாளித்துவ அதிகாரத்தின் கீழ் உள்ளோம். நாங்கள் கடனாளிகளாக உள்ளோம். இந்த முதலாளித்துவ அதிகாரிகள் நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்கிறார்கள். அவர்கள் பொருளாதாரம், நாட்டின் அபிவிருத்தி மட்டுமல்ல அரசியலையும் அவர்களே தீர்மானிக்கின்றனர். இலங்கையில் உள்ளது ஒரு பொம்மை அரசாங்கம். உலக முதலாளிகளுக்கு என்ன தேவையோ, என்ன எதிர்பார்க்கிறார்களோ அதையே இந்த அரசாங்கம் செய்கிறது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏன் சென்னையில் கூட தமிழர்களுக்கு ஆதரவாக சில போராட்டங்களை ஆரம்பித்தனர். பிரச்சாரங்களை மேற்கொண்டனர். இறுதியில் சத்தம் சந்தடியில்லாமல் அது கழுவப்பட்டு மறைந்து விட்டது. உலக முதலாளித்துவத்தின் வலிமை அத்தகையது.

மேற்கு நாடுகளினதும் இந்தியாவினதும் தற்போதைய போக்கு உலக முதலாளித்துவத்தின் போக்கு எல்ரிரிஈ க்கு புதிய சவாலாக அமைந்துள்ளது. அவர்கள் இதனை விளங்கிக் கொண்டு புதிய பாதையில் செல்ல வேண்டும். உலக முதலாளித்துவத்திடம் சென்று 'நீங்கள் கட்டாயம் வரவேண்டும், கட்டாயம் பார்க்க வேண்டும், நீங்கள் ஏன் உங்கள் பலத்தைக் காட்டவில்லை நீங்கள் ஏன் தலையிடவில்லை', அப்படி இப்படி என்ற கெஞ்சுவதை விட்டுவிட்டு உழைக்கும் மக்களிடம் வர வேண்டும். வந்து தொழிலாளர்களிடையே தம்மை முன்வைக்க வேண்டும். தென்னிலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும் அதனைச் செய்ய வேண்டும். மார்க்ஸிய கொம்யூனிஸ்ட் கட்சிகளுடன் இணைந்து செயற்பட வேண்டும். இது அடக்கப்பட்ட மக்களுடைய தமிழ், மக்களுடைய போராட்டம் என்பதை உலகத் தொழிலாளர்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். இது பாலஸ்தீன மக்களின் மீதான அடக்குமுறைக்கு ஒப்பானது என்பதை உலகத் தொழிலாளர்களக்குத் தெரிவிக்க வேண்டும். உலக முதலாளித்துவத் தலைவர்களுக்கு அல்ல.

தொழிலாள வர்க்கதின் தொழிற்சங்கங்களின் ஆதரவைத் திரட்டி இந்த மேற்குலக முதலாளித்துவ நாடுகள் ஏதாவது செய்தாக வேண்டும் என எண்ணுமளவிற்கு அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். மகிந்த அரசை யுத்தத்தை நிறுத்தச் சொல்லி, படுகொலைகளை நிறுத்தச் சொல்லி தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும். இதுதான் எல்ரிரிஈ ம் ஏனைய தமிழ் அமைப்புகளும் எடுக்க வேண்டிய புதிய பாதை. குறிப்பாக இலங்கை, இந்திய தொழிலாளர்களிடம் ஜனநாயக உரிமைகளுக்காக தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காக எல்ரிரிஈ ஆதரவைத் திரட்ட வேண்டும்.

இடதுசாரிகளுக்கு சவாலை ஏற்றுக்கொள்ள ஒரு நல்ல வாய்ப்பு அமைந்துள்ளது. துறைமுக, பொற்றோலிய, தொலைத் தொடர்பு தொழிலாளர்கள் இராணுவ அழுத்தங்களுக்கு பணிந்துவிடவில்லை. மற்றைய சமூகப் போராட்டங்களும் வெடிக்க ஆரம்பித்து உள்ளது. மகிந்த ராஜபக்சவின் கூட்டத்தினால் இந்த கட்டமைப்பு சிதைவடைவதை தாங்கிக் கொள்ள முடியாது. சவால்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக வேண்டும்.

என்னை ஒரு தனி நபராக நினைத்துவிட வேண்டாம். நான் தொழிற்சங்கத்தின் தொழிற்சங்கங்களின் கூட்டின் பிரதிநிதியாக வந்துள்ளேன். மேலும் நான் National Anti War Frontல் உள்ளேன். இவ்வமைப்பே கொழும்பிலும் எனைய பகுதிகளிலும் பல ஆர்ப்பாட்டங்களையும் கூட்டங்களையும் நடத்தியது. நாங்கள் ரவிராஜ்யை எங்கள் தோள்களில் சுமந்து சென்றோம். காணாமல் போவதற்கு எதிராக எனக்குப் பக்கத்தில் நின்ற போராடினார். மறுநாள் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். இது மீண்டும் நடைபெறலாம். ஆனால் அங்கே கொழும்பில், கண்டியில், காலியில் எனத் தொழிலாளர் இயக்கம் எங்கும் உள்ளது. அது இறந்துவிடவில்லை. இடதுசாரி அமைப்பு இறந்துவிடவில்லை. அதை நீங்கள் நினைவிற் கொள்ள வேண்டும்.

பழைய இடதுசாரி அமைப்பு இறந்துவிட்டது. சில சமயம் அவர்கள் வாழ்கிறார்கள். அவர்களுடைய இறந்த உடல் மட்டும் பாராளுமன்றத்திலுள்ளது. இவர்களை மறந்துவிடுங்கள். வாசுதேவாவை மறந்துவிடுங்கள். அவர் என்னுடன் 20 வருடங்கள் இருந்தவர். 20 வருடங்களாக நான் இப்போது உங்களுக்குச் சொல்வதை சொல்லிக் கொண்டிருந்தவர். அவர் ஒரு நோயாளி. அவரை மறந்துவிடுங்கள். இளைஞர்கள் அங்கு உள்ளனர். தமிழர்கள், சிங்களவர்கள், முஸ்லீம்கள், தொழிலாளர்கள், தொழிலாளர் இயக்கம் அங்கு உள்ளது. அது போராட்டத்தை தொடரும். நீங்கள் கட்டாயமாக அதனை ஆதரிக்க வேண்டும். எல்லோரும் சிங்கள பேரினவாதத்தில் திளைத்து நிற்கிறார்கள் என்று எண்ணி விடாதீர்கள். அது ஒரு சிறு பிரிவு. முட்டாள்கள். மூன்று அல்லது நான்கு லட்சம் பேர் இவர்களுக்கு பின்னால் ஓடுகிறார்கள். முதலாளித்துவத் தலைமைகளின் நம்பிக்கைத் துரோகத்தாலேயே இவர்கள் இன்று முன்னுக்கு வந்துள்ளனர். ஜேவிபி உம் ஹெலஉருமயவும் இவ்வளவுக்கு வந்தமைக்கு காரணம் மகிந்த ராஜபக்ச. ரணில் விக்கிரமசிங்க. மக்கள் சமஸ்டித் தீர்வுக்கே வாக்களித்தனர். சந்திரிகா ஆதரரிக்கும்படி கேட்ட போது மக்கள் வாக்களித்தனர். ரணில் மக்களை சமஸ்டித் தீர்வுக்கு வாக்களிக்கும் படி கேட்டபோது மக்கள் வாக்களித்தனர்.

எனது நாட்டில் நடைபெறுவதை நீங்கள் குறைத்து மதிப்பிடாதீர்கள். நாங்கள் எல்லோரும் இணைந்து இதிலிருந்து வெளியே வருவோம். ☑

"இலங்கை: சுதந்திரமடைந்ததில் இருந்து ஜனநாயக்தின் நிலை" என்ற தலைப்பிலான கலந்துரையாடல் இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ல் ஈஸ்ற்ஹாமில் இடம்பெற்றது. தமிழர் தகவல் நடுவம், தமிழ் சமூக அமைப்பு (Tamil Community Forum), சுடரொளி ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன. இலங்கையின் இடதுசாரிக் கட்சிகளில் ஒன்றும் தமிழ் மக்களின் ஒடுக்கு முறைக்கு எதிராகக் குரல் கொடுத்துவரும் நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன அதில் ஆற்றிய உரையின் தமிழாக்கம் இது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஹிஜாப் தடையும் ஸ்லாமோபோபியாவும்

**சேனன்**

உலகெங்கும் வலதுசாரி அரசுகளும் ஊடகங்களும் ஆசிய, ஆபிரிக்க மக்களின் குறிப்பாக முஸ்லீம் மக்களின் மீதான தாக்குதலை ஓங்கி நடத்துகின்றன.

"எங்களது கலாச்சாரத்துக்கு உட்பட்டு நடவுங்கள். அப்படி முடியாதென்றால் இங்கு வர வேண்டாம்" என்று ஏதோ தகப்பன் தனக்கு எழுதி வைத்த காணித்துண்டு போல் இங்கிலாந்து பிரதமர் ரொனிபிளேயர் அண்மையில் கூறியது அனைவரும் அறிந்ததே. ஈராக்கில் அநாவசியமாக அரை மில்லியனுக்கும் மேலான அப்பாவி மக்களின் சாவுக்கு நேரடிக்காரணமான இவர் அமெரிக்க கிறிஸ்தவ வலதுசாரி தலைவர்களுக்கு ஆதரவாக இருந்துகொண்டு முஸ்லீம்களைப் பார்த்து எங்கள் கலாச்சாரத்துக்கு அடிபணியுங்கள் என்று கூறுவது சகிக்கமுடியாதுள்ளது.ஏற்கனவே வெறுப்படைந்துள்ள இளைஞர்களை பயங்கரவாதத்தை நோக்கித் தள்ளும் வேலைதான் இது.

இவர் சொல்லும் காலச்சாரத்துக்கு எதிராகத் தான் மில்லியன் கணக்கான மக்கள் தெருத்தெருவாய் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். இவர் குறிப்பிடும் இந்த கலாச்சாரத்துக்கும் பெரும்பாண்மை இங்கிலாந்து மக்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை. ஜக் ஸ்ரோ, ஜோன் ரீட் போன்றவர்கள் மக்கள் நலம் என்ற பெயரில் சுயநலமாக முஸ்லீம்களை வேதனைப்படுத்துகின்றனர். ஜனநாயக முறைகளுக்காவது இவர்கள் கட்டுப்படு வார்கள் என்று நப்பாசை கொண்ட சனங்களின் முதுகில் அடித்தார் ஜோன் ரீட். சில ஜனநாயக உரிமைகளை விட்டுக்கொடுக்கக் கூடிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம் என்று அவர் கூறிய போது நாம் பேச்சிழந்துவிட்டோம். கிட்லரைப் போல் முஸ்லீம்களைப் பொறுக்கி எடுத்து வதை முகாம்களில் புதைக்கும் நடைமுறை வெகுதூரத்தில் இல்லை என்று நாம் சந்தேகப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் ஜோன் ரீட் பயங்கரவாதத்துக்கு எதிரான போருக்கும் பாசிசத்துக்கு எதிரான போருக்கும் வேறுபாடில்லை என்று தெரிவித்துள்ளார்.

இவர்கள் அச்சப்படும் இங்கிலாந்து முஸ்லீம்களின் நிலை பற்றி நாம் கதைத்துத்தான் ஆகவேண்டும். இந்நாட்டில் மிகவும் ஒடுக்கப்படும் மக்களாகவும் மிகவும் வறுமையில் வாடுபவர்களாகவும் இருப்பவர்களின் மேல்தான் இவ்வளவு துவேசம் காட்டப்படுகின்றது. இங்கிலாந்து முஸ்லீம்களில் 35 வீத குடும்பங்கள் எந்தவித வருவாயும் அற்று வாடுகின்றன. 73 வீதமான முஸ்லீம் சிறுவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றனர். 28 வீதமான இளைஞர்கள் வேலையற்று இருக்கின்றனர். முஸ்லீம்கள் வாழும் பகுதிகள் நாட்டில் வறுமையான பகுதிகளாக இருக்கின்றது. இப்படியிருக்க உலகின் மிகப்பெரிய பணக்கார நாடு ஒன்றின் அரசாங்கம் இந்த வறுமையை வேலையின்மையை போக்க முயற்சி எடுக்கும் என்று சிலர் கனவு காணலாம். ஆனால் அதற்கு எதிர்மறையாகவே எல்லாம் நடக்கின்றது.

2001ம் ஆண்டிற்குப்பிறகு ஆசியர்கள் மத்தியிலான பொலிசின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது. 2 வருடத்திற்குள் ஆசியர்களை நிறுத்தி விசாரணை செய்வது அதிகரித்துள்ளது. இதை உள்துறை அமைச்சு பெருமையாக வெளியிடுகிறது. 47 வீத ஆசிய இளைஞர்கள் இஸ்லாமிய எதிர்ப்பு நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நடைமுறைகளுக்கு ஆதரவாக இமாம்கள், பல்கலைக்கழக கல்வியாளர்கள், வியாபாரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என்று ஒரு சிறுபான்மையை தன்வசம் இழுத்து வைத்துள்ளது அரசாங்கம். ஏறத்தாள 5000க்கும் மேற்பட்ட முஸ்லீம் மில்லியனர்கள் வாழும் இங்கு இது சாத்தியப்படுவது ஒரு புதிரில்லை. இருப்பினும் 1.6 மில்லியனுக்கும் அதிகமாக வாழும் முஸ்லீம் வறிய மக்களை இந்த ஆயிரத்துச் சொச்ச முஸ்லீம் ஆதரவாளர்களை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டு கட்டி ஆழலாம் என்று நினைப்பது தான் தவறு.

இதில் அதிகூடிய அளவில் பாதிக்கப்படுபவர்கள் முஸ்லீம் பெண்கள் தான். அரச ஒடுக்கு முறைகளுக்கு மேலாக குடும்ப ஆணாதிக்க ஒடுக்குமுறைகளையும் அவர்கள் எதிர்நோக்கி உள்ளார்கள். அதற்கு உதவுமுகமாக முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் பாராளுமன்ற தலைவருமான ஜக்ஸ்ரோ முஸ்லீம் பெண்கள் ஹிஜாப் அணிவதற்கு எதிராக குரல் கொடுத்துள்ளார். குறிப்பிட்ட சில புத்திஜீவிகள் இதைப்பற்றிப் பிடித்துக் கொண்டு பிரச்சனை கிளப்புகின்றனர். ஹிஜாப் அணிவதை எப்படி நியாயப்படுத்துவது? மதம் ஒன்றின் பெண்களின் மீதான அடிமைப்படுத்தலின் அடையாளத்துக்கு ஆதரவு கொடுக்கலாமா? என்று அவர்கள் ஓங்கிக் கத்துகின்றனர். அவர்களுக்கு முதல் தெரிய வேண்டியது ஹிஜாப் அணிவது முற்றுமுழுதாக மதம் சார்ந்த நடவடிக்கை அல்ல.




இன்று உலகெங்கும் கிறிஸ்தவர்களாலும் ஏனைய மதத்தவர்களாலும் கொண்டாடப்படும் கிறிஸ்மஸ் கூட ஒரு மதச்சடங்கல்ல. பதினெட்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக புற்றீசல் போல் கிளம்பிய வியாபார நடவடிக்கைகளின் மூலம் மாறிய பொருளாதார சமூக உறவுகளே அதன் தோற்றத்தின் அடிப்படை. இயேசு காலத்தில் இருந்து கொண்டாடப்படுவது போல் ஒரு பிரேமையை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். உண்மையில் 18ம் நூற்றாண்டுக்கு முந்திய தலைமுறைக்கு கிறிஸ்மஸ், கிறிஸ்மஸ் காட் என்றால் என்னவென்று தெரியாது. மதத்தின் செல்வாக்கு காரணமாக கிறிஸ்மஸ்க்குள் இயேசு புகுந்து மதச்சடங்காகிப் போனது. நிலப்பிரபுத்தவத்தின் கை ஒடுங்கி முதலாளித்துவ புரட்சியின் ஆரம்ப கட்டத்தில் இது நிகழ்ந்தது.

இதுபோல் தான் நிலப்பிரபுத்தவத்தின் கை உச்சிக்கு வந்த பொழுது மதம் சமுதாயத்தின் பல்வேறு நடவடிக்கைகளை நிர்ணயித்தது. ஹிஜாப்பின் கதையும் இது தான். சுமேரியர் காலத்தில் இருந்து ஹிஜாப் அணியப்பட்டதற்கான ஆதாரங்கள் உண்டு. பல்வேறு மதத்தினரும் இதை அணிந்து வந்ததற்கான ஆதாரங்கள் உண்டு. (இந்துமதம், கிறிஸ்தவ மதம் உட்பட) ஏறத்தாள ஒரு 600 ஆண்டுகளுக்கு முன்பு ருஅயலலயன யனெ யுடிடயளளனை ஹுலயௌவநைள காலத்திலேயே இது மதத்துடன் இணைக்கப்படத் தொடங்கியது. பின்பு சவுதி அரேபியாவில் இஸ்லாமில்



ஏற்பட்ட பிரிவான வாகாயிப் பிரிவு கொண்டுவந்த ஷெரியா சட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றானது.

குர்ரானில் ஹிஜாப் அணிய வேண்டும் என்ற எந்தக் கட்டாயமும் எழுதப்படவில்லை. நபிகளின் மனைவி ஹிஜாப் அணிந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. அக்காலத்தில் ஹிஜாப் அணிவது உயர்தரமாக அதுவும் பெண்களை இளைஞர்களை கவர்ச்சிப்படுத்தவுமே நிகழ்ந்தது.

நிலப்பிரதித்துவ வரலாறு முடிவுக்கு வந்த பொழுது இஸ்லாமிய நாடுகளில் இதற்கு எதிரான குரல் எழும்பியது. 1923ல் துருக்கியில் ஹிஜாப்புக்கு மறுப்புத் தெரிவித்தார்கள். அதே ஆண்டு லெபனான், சிரியா, துனிசியா முதலான நாடுகளில் பொதுமக்கள் மத்தியில் ஹிஜாப்பை துறத்தல் நடவடிக்கைகள் நிகழ்த்தப்பட்டது. ஈரானில் 1927ல் இருந்து 1941 வரை Reza Pahlavi ஹிஜாப்பை தடை செய்திருந்தார். இந்த ஆண்டு (2006) நவம்பர் 3ல் பாகிஸ்தான் புஸ்வார் உயர் நீதிமன்றம் பெண் வழக்கறிஞர்கள் ஹிஜாப் அணிவதற்கு தடைவிதித்தது. இவ்வாறு அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் ஒடுக்குமுறைக்கான போராட்டம் தொடர்ந்து கொண்டு தான் இருக்கின்றது.

இருப்பினும் ஹிஜாப்பின் அரசியல் இங்கு முன்னணிக்கு வந்துள்ளமைக்கான முக்கிய காரணம் ஈராக் யுத்தமும் இவர்கள் கூறும் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தமுமே. இவர்கள் இதை முன்னிலைப்படுத்துவதற்கான காரணம் முஸ்லீம்களை கட்டுப்படுத்த மட்டுமே. மதத்துக்கு எதிரான அல்லது பெண்கள் உரிமைக்கான எந்த புனிதக் காரணங்களும் அவர்களுக்கு இல்லை.

மதம் பிற்போக்கானது, மதச்சடங்குகள் பல அடக்குமுறையின் வடிவங்கள் என்பது தெளிவானது. இஸ்லாம் மட்டுமன்றி கிறிஸ்தவ, இந்து, பௌத்த, யூத என்று அனைத்து மதங்களினதும் தேவை இன்று இல்லாமல் போய்விட்டது. மதங்களுக்கான வரலாற்றுத் தேவை இனிமேல் இல்லை என்று உறுதியாக கூறலாம். இருப்பினும் ஒரு குறிப்பிட்ட மதத்தை கடைப்பிடிப்பதற்கு தடையளிப்பது ஜனநாயகத்துக்கு புறம்பானது. எந்த மதத்தை பின்பற்றவும் விரும்பிய உடை அணியவும் அனைவருக்கும் உரிமை உண்டு. இது ஒவ்வொருவரதும் அடிப்படை ஜனநாயக உரிமை. தடை செய்வது அல்லது மத, உடை அடிப்படையில் உரிமைகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிராகரிப்பது ஒடுக்குமுறைகளை அதிகரிக்க மட்டுமே உதவும். ஜனநாயகத்தை நாம் விட்டுக்கொடுக்க வேண்டியுள்ளது என்று ஜோன் ரீட் சொல்வது இதைத்தான். பிரான்சில் ஜாக் சிராக் செய்ததும் இதைத்தான். பிரெஞ்சு தொழிற்சங்க மற்றும் இடதுசாரி அமைப்புகள் இதற்கு ஆதரவழித்தன.

அரச கருமங்களில் இருந்து மதத்தை வேறுபடுத்திய வரலாறு கொண்ட பிரான்சில் பாடசாலையில் ஹிஜாப் அணிவதை தடுப்பது நியாயமானதே. அதை தடுப்பது மதம், பொதுமக்கள் நடவடிக்கைகளில் தலையிடும், வரலாற்றைப் பின்னோக்கித் தள்ளும் செயற்பாடு என்று அவை வாதிட்டன. ஹிஜாப் போட்டு வந்ததற்காக ஒரு மாணவி பாடசாலையை விட்டு வெளியேற்றப்பட்டதோடு அவர்கள் விவாதங்கள் ஒரு முடிவுக்கு வந்தன.

பாடசாலைக்காகவும் அரசாங்கத்திற்காகவும் கதைப்பதா அல்லது வெளியேற்றப்பட்ட மாணவிக்காக போராடுவதா என்ற கேள்வியில் வேற்றுக்கருத்து ஏற்பட முடியாது. தொழிற்சங்கங்களுக்கு அவர்கள் அரசாங்கம் சார்ந்து எடுத்த முடிவு இந்த மாணவிக்காக போராட்டத்தை நடத்த முட்டுக்கட்டையாக நின்றது. இத்தருணத்தில் புரட்சிகர இடதுசாரிகள் என்ற கட்சி மட்டும் அந்த மாணவியின் உரிமைக்காக போராட உடனடியாக முன்வந்தது. அவர்கள் மட்டுமே அரசாங்க தடைக்கெதிரான சரியான வாதத்தை தொடர்ந்து வைத்து வந்தார்கள்.

இதே தடை இங்கிலாந்தில் நடந்த பொழுது இங்கு உள்ள தொழிற்சங்கங்கள் முற்றிலும் மாறுபட்ட நிலைப்பாட்டை எடுத்தன. கேள்வியின்றி ஹிஜாப்புக்கு ஆதரவாக தங்களை வெளிப்படுத்தினர். ஹிஜாப் அணிந்த ஆசிரியை பாடசாலையை விட்டு வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து இந்த பிரச்சனை விவாத மேடைக்கு தள்ளப்பட்டது.



கல்வித்துறையில் ஹிஜாப் அணிவது பல்வேறு சிக்கல்களை எழுப்புகின்றது. முகத்தை மூடிமறைத்த ஆசிரியையிடம் இருந்து மாணவர்கள் கற்றுக் கொள்வதால் அவர்களின் கல்வி வளர்ச்சி பாதிக்கப்படுகிறதா? என்ற முக்கிய கேள்வி எழும்புகிறது. மனிதர்களுக்கிடையிலான உரையாடலில் முகத்திற்கான பங்கு ஆசிரிய மாணவர்களின் நெருக்கம் எவ்வளவு தூரம் கல்வி வளர்ச்சிக்கு உந்துதலாய் இருக்கின்றது போன்ற பல்வேறு சிக்கலான கேள்விகளை எழுப்புகின்றது. இதற்கு சுருக்கமான விடை கிடையாது. ஹிஜாப் அணிவது பல்வேறு தொழில்களை (பெரும் லொறிகள் ஓடுவது, வழக்கறிஞர் தொழில் உட்பட) செய்வதற்கு தடங்கலாக இருக்கும் என்று பொதுவாக சொல்லலாம். ஆனால் அது ஒரு முழுமையான வரைவு அல்ல. கைகள் இல்லாத ஓவியக் கலைஞர்களையும் கண் தெரியாத பாடகர்களையும் இசைஞர்களையும் உடலின் ஒரு பாகமும் உபயோகமற்று முளை மட்டும் வேலை செய்யும் விஞ்ஞானிகளையும் என்று எத்தனையோ சாதனைகளை சாதித்த மனித குலத்திற்கு சேவை செய்ய ஹிஜாப் பெரும் தடை அல்ல. இருப்பினும் ஒப்பீட்டளவில் ஹிஜாப் அணிவதை முன்னிலைப்படுத்த முடியாது.




எவ்வளவு தூரம் ஹிஜாப் அணிவதற்கான உரிமைக்காக குரல் கொடுக்கிறோமோ அதே அளவு ஹிஜாப் அணியாமல் இருக்கும் உரிமைக்காகவும் நாம் குரல் கொடுக்க வேண்டும். இந்த விடயத்தில் தான் பல இங்கிலாந்து தொழிற் சங்கங்கள் தவறு செய்கின்றன. பல குடும்பங்களில் வற்புறுத்தலாலேயே ஹிஜாப் அணிகின்றனர். அதற்கு எதிராக கல்வி புகட்ட வேண்டியதும் தொழிற் சங்கங்களின் கடமை தான். ஆனால் அதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை.

## தேசம் அறிவித்தல்

**அன்புடன் வாசகர்களுக்கு,**

**தேசம் சஞ்சிகையை பெறுபவர்கள் இதுவரை உங்கள் சந்தாவைச் செலுத்தாது இருப்பின் தயவு செய்து 10 பவுண்களை அனுப்பி சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




## எனது அனுபவப் பார்வையில்:

# தமிழ் - முஸ்லீம் உறவுகளும் எதர்காலமும்

**எஸ் பாலச்சந்திரன்**
(தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை)

அண்மையில் லண்டனில் முஸ்லிம் மக்கள் தொடர்பாக நடைபெற்ற கருத்தரங்குகள் மற்றும் கூட்டங்கள் இதுபற்றி எழுதவேண்டும் என்னும் ஆர்வத்தை எனக்குள் தூண்டியது. அண்மையில் லண்டனில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. இது இலங்கை முஸ்லிம்கள் பற்றியது என்பதாலும் இதனை நடத்தியவர்கள் ஜனநாயகம் மற்றும் மாற்றுக் கருத்துக்களுக்காக குரல் கொடுப்பவர்கள் என்பதாலும் அங்கு நன்கு ஆழமாகவும் தெளிவாகவும் மிகவும் பயன் உள்ள வகையில் கருத்துக்களை முன் வைப்பார்கள் என்று நம்பி மிகவும் ஆவலுடன் ஒரு பார்வையாளனாகப் பங்குபற்றினேன்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் ஹொலண்ட் நாட்டில் இருந்து வந்தவர் பேச அழைக்கப்பட்டார். அவர் முன்பு மார்க்சிய-லெனிய இயக்கம் ஒன்றில் அங்கத்தவராக இருந்தவர். எனவே அவர் முஸ்லிம் பிரச்சனை குறித்து மார்க்சியப் பார்வையில் தனது கருத்துக்களை முன்வைப்பார் என எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்த்தனர். அவரும் தனது பேச்சின் ஆரம்பத்திலேயே "இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத்தமிழர்கள் என நான்கு தேசிய இனங்கள் உண்டு. எனவே மார்க்சிய விதிகளின்படி தமிழர்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம்கள் மற்றும் மலையகத்தமிழர்கள் அனைவருக்கும் பிரிந்து போகிற உரிமை உண்டு" என்று ஒரு குண்டை தூக்கிப் போட்டார். இவரின் இப்பேச்சைக் கேட்டதும் உண்மையிலே பலரும் அதிர்ச்சியடைந்தனர்.

இவ் அதிர்ச்சி மற்றும் ஏமாற்றத்தில் இருந்து மீள்வதற்குள் அடுத்து பேச வந்தவரும் இதே பாணியில் இன்னொரு குண்டை தூக்கிப் போட்டார். அவர் தன் பேச்சில் "முஸ்லிம்களும் தமிழ்பேசும் மக்கள்தான். ஆனால் அவர்கள் விரும்பினால் பிரிந்து போகலாம்" என்றார். அப்போது ஒருவர் இடைமறித்து "அப்படியானால் நெடுந்தீவு, புங்குடுதீவு மக்களும் பிரிந்து போக கோரினால் நீங்கள் அனுமதிப்பீர்களா" என கிண்டலாக கேட்டார். அவர் நகைச்சுவையாகக் கேட்கிறார் என்பது புரியாமல் "ஆம் எந்த மக்கள் கேட்டாலும் நாம் பிரிந்து போக அனுமதிப்போம். உறுதியாக ஆதரிப்போம். ஏனெனில் நாங்கள் உண்மையான ஜனநாயகவாதிகள்" என்று சீரியஸ்யாக பதில் கூறினார். இந்தக் கூத்துக்களைப் பார்த்த பலருக்கு உண்மையிலே மயக்கம் வராத குறைதான். நல்ல வேளை மாக்ஸ் லெனின் இறந்துவிட்டார்கள். இல்லையென்றால் இவர்களிடம் மார்க்சியம் ஜனநாயகம் படும் அவஸ்த்தைகளைப் பார்த்து அவர்கள் தற்கொலைதான் செய்திருப்பார்கள். சில முஸ்லிம்கள் கூட தமது அதிகூடிய கோரிக்கையாக தென்கிழக்கு அலகையே முன்வைத்துள்ளனர். அவர்கள் இதுவரை முஸ்லிம் தனிநாடு எதையும் கேட்கவில்லை. இந்நிலையில் இவர்கள் அதுவும் மார்க்சிய அடிப்படையில் பிரிந்து போகலாம் என்று கூறுவது உண்மையில் வேடிக்கையானதும் பையித்தியக்காரத்தனமானதும் ஆகும்.

மாசே-துங் அடிக்கடி கூறுவார் "காலுக்கு அளவாக சப்பாத்து எடுக்க வேண்டுமேயொழிய சப்பாத்துக்கு அளவாக காலை வெட்டக்கூடாது." மக்களுக்கான மார்க்சிய தத்துவங்களை ஆக்க பூர்வமாக யதார்த்த பூர்வமாகப் பயன்படுத்த வேண்டுமேயொழிய வெறும் ஏட்டுச்சுரக்காய்களாகப் பயன்படுத்த முனையக்கூடாது. இல்லையேல் மேற்கூறிய நாசகார தத்துவ வியாக்கியானங்களையே நாம் கேட்க நேரிடும். இவர்களிடம் நாம் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக்கொள்வது என்னவெனில் "நீங்கள் என்ன வேண்டுமானாலும் கூறுங்கள். ஆனால் தயவுசெய்து மார்க்சியத்தை துணைக்கு அழைத்து அதனைக் கொச்சைப்படுத்தாதீர்கள்" என்பதே.

1985ம் ஆண்டு நானும் மற்றும் இருப்பது தோழர்களும் மட்டக்களப்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி நடந்து வரும் வேளையில் சுண்டிக்குளம் என்னும் இடத்தில் 'அங்கிள்' அல்லது 'மாமா' என்று அழைக்கப்படும் புலிகளின் தளபதி எங்களைக் கைது செய்தார். அவர் எங்கள் ஆயுதங்களை பறித்தெடுத்ததுடன் எங்களை மருதங்கேணி என்னும் இடத்தில் அடைத்துவைத்தார். அவ்வேளையில் அங்கிள் எங்களை தமது புலிகள் இயக்கத்தில் சேரும்படி கேட்டார். அதற்கு நான் "தனியாக ஒரு இயக்கம் நடத்த வேண்டும் என்பதற்காக நாங்கள் எமது இயக்கத்தை நடத்தவில்லை. கொள்கை காரணமாகவே தனியாக இயங்குகிறோம். குறிப்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முஸ்லிம் மக்கள் மற்றும் மலையக மக்கள் தொடர்பாக உங்கள் இயக்கத்தின் கொள்கை என்ன?" என்று கேட்டேன். இதற்குரிய பதிலை தமது தலைமையிடம் கேட்டு வந்து கூறுவதாக சொல்லிவிட்டுச் சென்ற அங்கிள் அவர்கள் அப்போது யாழ் மாவட்ட தளபதியாக இருந்த கிட்டு விடம் சென்று இதனைக் கேட்டுள்ளார். கிட்டு தனது வழக்கமான பாணியில் "பு...மவனே எங்களுக்கே தீர்வைக் காணவில்லை. அதற்குள்ளே உனக்கு முஸ்லிம் பு...மக்களுக்கு தீர்வு வேணுமோ?" என்று கூறியுள்ளார். இதனைக் கேட்டு ஏமாற்றம் அடைந்த அங்கிள் அதன் பின்னர் எங்களை தமது இயக்கத்தில் சேரும்படி ஒருபோதும் கேட்கவில்லை. உண்மையில் இதனை இப்போது நான் ஏன் கூறுகிறேன் என்றால் எமது இயக்கங்கள் ஆரம்பத்திலேயே முஸ்லிம் மற்றும் மலையக மக்கள் தொடர்பாக தெளிவான பார்வை கொண்டிருக்கவில்லை என்பதையும் அவ்வாறு அவர்கள் கொண்டிருந்திருந்தால் இன்றைய இவ் அவல நிலையை தவிர்த்திருக்கலாம் என்பதையும் சுட்டிக்காட்டுவதற்கே.

புலிகள் இயக்கம் மட்டும்தான் முஸ்லிம் மக்களுக்கு எதிரானவர்கள். மற்ற இயக்கங்கள் எல்லாம் முஸ்லிம் மக்களை மிகவும் அன்பாக நடத்தினார்கள் என சிலர் நினைக்கக்கூடும். ஆனால் உண்மை என்னவெனில் முஸ்லிம் மக்கள் தொடர்பில் மற்ற இயக்கங்கள் புலிகளுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் இல்லை என்றே நிருபித்திருக்கிறார்கள். முதன் முதலில் கிழக்கு மாகாணத்தில் 1984ம் ஆண்டு உன்னிச்சைக் குளத்திற்கு அருகில் இருந்த பாவக்குடிச்சேனை என்னும் கிராமத்தில் இருந்த முஸ்லிம் மக்களே வெளியேற்றப்பட்டார்கள். இதனைச் செய்தவர்கள் சிவா என்பவரின் தலைமையில் வந்த EPRLF இயக்கத்தினரே.

புரட்சி பேசிய தோழர்களே முதல் தாக்குதலை முஸ்லிம் மக்கள் மீது தொடுத்தார்கள் என்பது கொடுமையென்றால் அதைவிடப் பெரிய கொடுமை என்னவெனில் தாங்கள் பாதுகாப்பு தருவோம் என்று கூறி அம் மக்களிடமிருந்து சாப்பாடு பார்சல் வாங்கிச் சாப்பிட்ட PLOTE இயக்கத்தினர், EPRLF இயக்கத்தினர் முஸ்லிம் மக்களை தாக்குகிறார்கள் என்பதை அறிந்தவுடன் அவர்களுக்குப் போட்டியாக அம் முஸ்லிம்மக்களைத் தாக்கி விரட்டினார்கள். காட்டில் பதுங்கியிருந்த அம் மக்களை சில தமிழ் கிராமவாசிகள் பாதுகாப்பாக மட்டக்களப்பு நகரத்தை நோக்கி அழைத்துச் சென்றவேளை தள்ளாடித் தள்ளாடி இறுதியாக நடந்து சென்ற ஒரு வயோதிப முஸ்லிம் முதியவரைக் கண்ட TELO இயக்கத்தினர் இரகசியமாக காட்டினுள் கடத்திச் சென்று கொலை செய்தனர். அம்முதியவர் தன் வேட்டித் தலைப்பில் முடிஞ்சு வைத்திருந்த சில்லறைப் பணத்தை




மார்ச் 18, 2006ல் சமாதானத்தை வலியுறுத்தி ஏற்பாடு செய்திருந்த போராட்டத்தின் போது

அபகரிப்பதற்காகவே இக் கொலையைச் செய்தனர் என்பதை அறிந்த போது முஸ்லிம் உயிர் ஒன்றிற்கு எந்தளவு மதிப்பு இயக்கங்கள் வழங்கியிருந்தன என்பதை அறியக்கூடியதாய் இருந்தது. இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. ஏனெனில் படுவான்கரைக்கு வியாபாரத்திற்கு வந்த காத்தான்குடி முஸ்லிம்கள் பலர் TELO இயக்கத்தால் உளவாளிகள் என்று முத்திரை குத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அவர்கள் கொண்டு வந்த சையிக்கிளை எடுத்துக் கொள்வதற்காகவே அவர்கள் இவ்வாறு கொலை செய்யப்பட்டார்கள். இங்கு ஒரு முஸ்லிம் உயிரின் பெறுமதி பழைய சையிக்கிளின் பெறுமதியைவிட மலிவாகவே இருந்தது.

முஸ்லிம் மக்கள் எங்கள் போராட்டத்தை ஆதரிக்கவில்லை. அவர்கள் எங்களை அரசாங கத்திற்கு காட்டிக் கொடுக்கிறார்கள் என்பதே இயக்கங்கள் பொதுவாக முஸ்லிம்கள் மீது சுமத்தும் குற்றச்சாட்டாகும். முஸ்லிம் மக்களுக்கு உரிய தீர்வை இயக்கங்கள் முன்வைக்கவில்லை. எனவே இந்நிலையில் அம்மக்கள் தமக்கு ஆதரவு தரவேண்டும் என எதிர்பார்க்க இவர்களுக்கு தகுதியில்லை. இருப்பினும் அம்மக்கள் அதரவு தந்தார்கள் என்பதே உண்மையாகும்.

உதாரணமாக 1984ம் ஆண்டு எமது இயக்கத்தினர் சென்ரல்காம்ப் பொலிஸ் நிலையத்தை தாக்கியபோது எமது தோழர் ஒருவரின் காலில் துப்பாக்கிக் குண்டு தாக்கி காயம் ஏற்பட்டது. அப்போது எம்மிடம் அவருக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்குரிய வசதி இருக்கவில்லை. அவ்வேளை மண்முனை என்னும் பிரதேசத்தில் வசித்து வந்த கஸ்சியர் என்ற முஸ்லிம் பெரியவர் காயம் பட்ட எமது தோழரை அழைத்துச் சென்று மருத்துவ சிகிச்சை வழங்கினார். பொலிஸ் நடமாட்டம் அதிகம் இருந்த அந்தக் காலத்தில் எமது தோழரை தனது வீட்டில் 40 நாட்கள் வைத்திருந்து பூரண சுகமாக்கித் தந்தார். அவர் எங்களுக்கு மட்டுமல்ல அனைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இயக்கங்களுக்கும் நிறைய உதவிகள் செய்தார். இருந்தும் அவரும் குடும்பத்தினரும் 1997ம் ஆண்டு விரட்டியடிக்கப்பட்டனர். தற்போது அவர்கள் பொல்லநறுவையில் அகதியாக வாழ்கின்றனர்.

அதேபோல் 1983ம் ஆண்டுக்கு முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினரே போராளிகளை பகிரங்கமாக ஆதரிக்க முன்வராத நிலையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா உட்பட ஐந்து கட்சியினரின் கொழும்புக் கூட்டத்தில் "தமிழ் இளைஞர்கள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் போராளிகள். அவர்களின் ஆயுதப் போராட்டத்தை நாம் ஆதரிக்கிறோம்" என்று பேசியவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் சண்முகதாசன் அவர்கள். அவ்வாறு ஆதரித்த அக் கட்சியின் யாழ்மாவட்ட பொறுப்பாளராக இருந்தவர் இக்பால் என்னும் முஸ்லிம் ஆவார். இவர் கம்யூனிஸ்ட் கட்சியில் செயற்பட்டு வந்தமையினால் முஸ்லிம் பள்ளிவாசல் நிர்வாகத்தால் ஒதுக்கி வைக்கப்பட்டார். அவர் இது குறித்து கவலை கொள்ளாமல் தனது புரட்சிப்பணிகளை மேற்கொண்டார். அவ் வேளையில் அவர் இயக்கங்களுக்கு நிறைய உதவிகள் செய்தார். குறிப்பாக எமது தோழர்களுக்கு அவரும் டானியலும் நிறைய மார்க்சிய வகுப்புகள் எடுத்தனர். அதுமட்டுமன்றி சாதியப் போராட்டத்தின்போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிறைய உதவிகள் செய்தார்.



இருப்பினும் இவரும் புலிகளால் விரட்டி அடிக்கப்பட்டார். அவ் வேளை "போராளிகள் என்று சொல்லி பாய்ந்து பாய்ந்து உதவி செய்தாயே. இப்போது உன்னையும் வெளியேற்றிப்போட்டாங்களே" என சில முஸ்லிம் மக்கள் இவரைக் கேலி செய்துள்ளனர். அதற்கு அவர் "பிரபாகரன் பிறக்க முன்னர் நான் பிறந்து தவழ்ந்த மண் இது. என்னை வெளியேற்ற பிரபாகரனுக்கு எந்த உரிமையும் இல்லை. இன்று அவரிடம் ஆயுதம் உள்ளது. என்னிடம் இல்லை. அதனால் நான் வெளியேற்றப்பட்டேன். நாளை என்னிடம் ஆயுதம் வரும்போது நான் பிறந்த என் மண்ணுக்குச் செல்வேன்" என்றார். இதேபோல் பல உதாரணங்கள் உண்டு. ஆனால் நேர்மையுள்ளம் கொண்ட எவரும் முஸ்லிம் இளைஞர்கள் பலர் இயக்கங்களில் சேர்ந்து போராடியதையும் முஸ்லிம் மக்கள் பலர் போராட்டத்திற்கு உதவிகள் செய்து ஆதரவளித்ததையும் மறுக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

மட்டக்களப்பில் தமிழர்களும் முஸ்லிம்களும் புட்டும் அடையும் போல் வாழ்கிறார்கள் என்று கூறுவார்கள். அதேபோல் இந்தியாவில் தமிழ்நாட்டில் தமிழர்களும் முஸ்லிம்களும் மாமன் மச்சான் உறவுமுறை கூறி வாழ்கிறார்கள். தமிழ்நாட்டு முஸ்லிம்கள் தமிழ் இன உணர்வுடனே வாழ்கின்றனர். அதனால்தான் சந்திரிக்கா காலத்தில் யாழ் மக்கள் அகதியாக வெளியேறிய போது இதனை தாங்க முடியாது வேதனையில் தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தற்கொலை செய்து கொண்டான் ஒரு முஸ்லிம் இளைஞன். யாழ்பாணத்தில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டது அறிந்திருந்தும்கூட புலிகளால் பல முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர் என்பதைத் தெரிந்தும்கூட தமிழ்நாட்டில் துறையூரில் வசித்து வந்த அந்த ஏழை முஸ்லிம் இளைஞன் யாழ் தமிழ் மக்கள் அகதியாக வெளியேறியபோது துக்கம் தாங்காமல் தமிழ் இன உணர்வுடன் தற்கொலை செய்துகொண்டான். இவ் இளைஞனின் தியாகம் பெருந்தன்மையானது. உண்மையில் இவ் முஸ்லிம் இளைஞனே மாமனிதன் பட்டத்திற்கு மிகவும் பொருத்தமானவன்.

நான் இந்தியச் சிறையில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அடைக்கப்பட்டிருந்தவேளையில் எனது அறைக்கு அருகில் இமாம்அலி (படம்) வைக்கப்பட்டு இருந்தார். (ஏழை அப்பாவியான அவ் இளைஞன் எப்படி தீவிரவாதியானான் ? எப்படி பயங்கரவாதியாக சித்தரிக்கப்பட்டு பெங்களூரில் படுகொலை செய்யப்பட்டான் என்பது ஒரு நீண்ட கதை. சுருக்கம் கருதி அதை நான் இங்கு சொல்லவிரும்பவில்லை.) இமாம்அலி மிகுந்த தமிழ் இன உணர்வு கொண்டிருந்தார். மதத்தால் தாம் இஸ்லாமியர் என்றாலும் இனத்தால் தாம் தமிழரே என அடிக்கடி கூறுவார். அது மட்டுமன்றி தான் யாழ்ப்பாணம் சென்று தமிழ்மக்களுக்காக சிங்கள இராணுவத்திற்கு எதிராக போராட விரும்புவதாகவும் அதற்குரிய ஏற்பாடுகளை செய்து தரமுடியுமா என்றும் என்னிடம் கேட்பார். இதை நான் இங்கு குறிப்பிடுவதன் நோக்கம் என்னவெனில் தமிழ்நாட்டில் முதலாளித்துவக் கட்சிகள் முஸ்லிம் மக்களையும் தமிழின உணர்வுடன் ஐக்கியப்படுத்தியே வைத்திருக்கின்ற வேளையில் இதனை ஏன் யாழ்ப்பாண தலைமையைக் கொண்ட கட்சிகளால் இலங்கையில் செய்யவில்லை என்பதே.

இங்கு நான் இன்னும் ஒரு விடயத்தை குறிப்பிட விரும்புகிறேன். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் காலம்சென்ற அஸ்ரப் அவர்கள் இறப்பதற்கு முன்னர் வெள்ளவத்தையில் பெண்கள் ஆய்வு மன்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





நிலையத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றினார். அப்போது "புலிகளும் அரசாங்கமும் பேசி ஒரு தீர்வை எட்டு மாயின் அப்போது உங்கள் நிலை என்ன?" என்று ஒரு கேள்வியை நான் கேட்டேன். அதற்கு அஸ்ரப் (படம்: இடம்) அவர்கள் எவ்வித தயக்கமும் இன்றி "அப்படி ஒரு நிலை வருமாயின் நான் தனி அலகு கேட்டு அதனைக் குழப்பமாட்டேன்" என்றார். இவ்வாறு துணிந்து முடிவெடுக்கக்கூடிய தலைமை முஸ்லிம் மக்களுக்கு இன்று இல்லை என்பதும் முஸ்லிம் பிரச்சனைகளுக்கு ஒரு நல்ல தீர்வு இதுவரை கிடைக்காமைக்கு ஒரு காரணமாகுமோ என நான் நினைப்பதுண்டு.

முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய தலைவர் ஹக்கீம் அவர்கள் அண்மையில் லண்டனில் ஒரு கருத்தரங்கில் உரையாற்றும்போது "பெரும்பான்மை இனத்திற்கு எதிராக ஒரு சிறுபான்மை இனம் போராட்டம் நடத்தும் போது இரண்டாவது சிறுபான்மையினம் பெரும்பான்மையினத்தின் செல்லப் பிள்ளையாக இருக்கும் என லெனின் தனது நூலில் எழுதியுள்ளார்" என்று குறிப்பிட்டார். அதேவேளை இதனை உணர்ந்து பெரும்பான்மையினத்தின் சூழ்ச்சிக்குப் பலியாகாமல் தமிழ், முஸ்லிம் மக்கள் ஐக்கியப்பட வேண்டும் என குறிப்பிட்டார். அவர் மட்டுமல்ல நான் அறிந்தவரையில் பல முஸ்லிம் தலைவர்களும் இக் கருத்தையே கொண்டிருக்கின்றனர்.

அதேபோல் தமிழ் மக்கள் மத்தியிலும் இக் ஐக்கியத்திற்கான குரல்கள் ஒலிக்க ஆரம்பித்துள்ளன. யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்ட வேளையிலேயே இக் குரல்கள் ஒலித்திருக்க வேண்டும். ஆனால் பல வருடங்கள் கடந்து தாமதமாக தற்போது லண்டனில் ஒலிக்க ஆரம்பித்திருப்பினும் இவை மிகவும் அவசியமானதும் ஆரோக்கியமானதும் ஆகும். ☑

*தமிழ் - முஸ்லீம் இனஉறவுகள் கலந்துரையாடல் :*
*காலம் : 10 மார்ச் 2007 நேரம் : மாலை 2:30 மணி முதல் மாலை 7 மணி*
*இடம் :* Forest YMCA, 642 Forest Rd, Walthamstow, London E17 3EF

SCUDAMORES SOLICITORS
Immigration and Assylum
Crime
Legal Aid
Housing
020 7644 0480
Email:raj@scudamores4solicitors.com
Argo House
Kilburn Park Road
London
NW6 5LF



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரி கொன்ஸ்ரன்ரைன்

# வந்துபோகும் காலக்கேடுகளும் வராமலே போகும் தமிழீழமும்



எதிர்பார்ப்பும் அங்கலாய்ப்பும் ஈழத்தமிழர்களின் இரத்தத்தில் ஒன்றாக கலந்துவிட்ட விடயங்கள். தமிழீழம் அமைப்பதற்கு முதலில் நாள் குறித்தவர்கள் விடுதலைக் கூட்டணியினர். பின்னர் தைப்பொங்கலில் தமிழீழம் என சுப நேரம் பார்த்து தமிழீழம் பிடித்துத் தந்தவர்கள் நமது ஒப்பற்ற இயக்கத் தலைவர்கள். இப்போது ஒருவரும் சொல்லாமலே மக்கள் தாமாகவே ஏதோ திகதிகளை எதிர்பார்த்து விடிவை எதிர்பார்க்கும் ஒரு பரிதாப நிலையில் உள்ளனர். மாவீரர் தினம் என்றதும் ஒரு எதிர்பார்ப்பு, பின்னர் தலைவரின் பிறந்ததினத்தில் ஒரு எதிர்பார்ப்பு, அதுவும் தவறினால் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்ட தினத்தில் ஒரு எதிர்பார்ப்பு (மாசி 22), அதிலும் விசேசமாக சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு ஐந்தாவது வருடம் பூர்த்தியானதும் (22.02.2007) அதிக எதிர்பார்ப்பு!!!

தினங்களும் நாட்களும் வந்து போகின்றதே தவிர ஈழப்போராட்டத்தில் ஏதேனும் முன்னேற்றம் இருப்பதாகத் தெரியவில்லை. கேள்விகள் பல இருக்கின்ற போதிலும் பதில் கூற யாரும் இல்லை. புலம்பெயர் நாடுகளில் உள்ள தமிழீழப் புலி ஏஜென்டுகளும் வால் பிடிப்பவர்களும் அடிதடிகளில் ஈடுபடுகின்றவர்களும் கப்சிப். இவர்கள் பாலாவை இது அந்த பாலா அல்ல பாலசுப்பிரமணியத்தை அழைத்து பாட்டுக்கச்சேரி வைப்பதிலும் கோயில் நடாத்துவதிலும் சைவமும் தமிழும் என்று கதாப்பிரசங்கம் நடத்துவதிலும் படுபிசி.............! நேரம் கிடைக்கும் போது இந்தியத் தூதுராலயம், பாகிஸ்தான் தூதராலயம் முன் ஒரு சின்ன ஆர்ப்பாட்டம் அல்லது No 10 முன்பாக இன்னுமொரு சின்னக்கத்தல் அதுவும் இல்லாவிட்டால் ஜெயதேவபதீஸ்வரர் முன்னால் சின்ன முட்டை அபிசேகம், ரிபிசியில் சின்ன கலாட்டா.

இன்று புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள விடுதலைப் புலிகளின் நிலமையோ படுபரிதாபம். ஒரு காலகட்டத்தில் இந்திய திரைப்பட கலைஞர்களை அழைத்து ஐரோப்பிய நாடுகளில் நிகழ்ச்சிகளை நடத்துவதை தடுத்துவிட்டு இன்று தாமே முன்நின்று இந்நிகழ்ச்சிகளை நடாத்துகிறார்கள். சில இந்திய திரைப்படங்களை ஆபாசம், தமிழ் கலாச்சாரத்துக்கு ஒவ்வாது என்று கூறி (Boys, ...........) வன்னியில் தடைசெய்துவிட்டு பின்னர் அதே திரைப்படத்தை

> அரசியல் தொடக்கம், கல்வி, சமூக, சமய, களியாட்ட வைபவங்கள் வரை தாமே நாட்டுக்காக நடாத்த வேண்டுமென வரிந்துகட்டிக் கொண்டு நின்றனர். வருங்காலங்களில் தமிழ் வீடுகளில் நடைபெறும் சாமத்திய வீட்டுக் கொண்டாட்டங்களையும் பிறந்ததின வைபவங்களையும் தாமே முன்னின்று நடாத்த முற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

சென்சர் செய்யப்படாது முழுமையாக, குடும்பத்துடன் பார்த்து மகிழ வேண்டிய படம் என்று IBC வானொலியில் விளம்பரம் செய்கின்றனர்.

அரசியல் தொடக்கம், கல்வி, சமூக, சமய, களியாட்ட வைபவங்கள் வரை தாமே நாட்டுக்காக நடாத்த வேண்டுமென வரிந்துகட்டிக் கொண்டு நின்றனர். புலம்பெயர் நாடுகளில் நடைபெறும் தமிழ் பாடசாலைகளை தம்கைவசம் ஆக்குவது, அகதி அமைப்புக்களை கைப்பற்றுவது, கல்வி நிறுவனங்களைக் கைப்பற்றுவது, விளையாட்டு விழாக்களை தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது, என 21ம் நூற்றாண்டுக்கு ஒவ்வாத ஒரு மூடிய சமுதாயத்தை தமிழ் மக்கள் முற்றாக நிராகரிக்க வேண்டும். வருங்காலங்களில் தமிழ் வீடுகளில் நடைபெறும் சாமத்திய வீட்டுக் கொண்டாட்டங்களையும் பிறந்ததின வைபவங்களையும் தாமே முன்னின்று நடாத்த முற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அண்மையில் வெண்புறா அமைப்பினர் நடாத்திய பாலசுப்பிரமணியத்தின் பாட்டுக்கச்சேரியில் பல ஆயிரம் பவுண்கள் நட்டம் ஏற்பட்டதாக கூறப்படுகின்றது. முன்னைய காலங்களில் 15 பவுண்களுக்கு நடத்தப்பட்ட நிகழ்ச்சிகள் இன்று 50 பவுண்கள் ரிக்கற்றிற்கு நடத்தப்படுகின்றது. அதுமட்டுமல்லாமல் அமைப்பாளர்கள் கேட்ட விடுதலைக் கீதங்களை பாட பாலசுப்பிரமணியம் மறுத்துள்ளார். எல்லாவற்றுக்கும் மேலாக அங்கு வருகை தந்தவர்களிடம் 15 வீத பணத்தை திருப்பித் தருவோம் எனக்கூறி எல்லோரின் பெயர்களையும் விலாசங்களையும் வாங்கியுள்ளனர்.

இன்று புலிகளின் பெயரால் புலம்பெயர்ந்த நாடுகளில் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஈழமக்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்விதத்தில் பிரயோசனப்படுகின்றது என்ற கேள்வியையும் அதிலும் குறிப்பாக வரவுசெலவு விபரங்களையும் சம்பந்தப்பட்டவர்கள் வெளியிட வேண்டும். இன்று கள்ளக்காட் போட்டு போலீசில் மாட்டுப்பட்டவனும் தான் விடுதலைப் புலிகளுக்காகத்தான் இதைச் செய்தேன் என்கிறான். பாட்டுக்கச்சேரி வைப்பவனும் புலிகளுக்காகத் தான் செய்கிறேன் என்கிறான். எது எப்படி இருப்பினும் ஒன்றுமட்டும் தெளிவாக விளங்குகின்றது. ஒன்றுக்கும் கணக்குவழக்கு இல்லை, யாரும் கேட்பதும் இல்லை.

காலாகாலமாக விடுதலைப் புலிகளால் செய்யப்பட்ட தவறுகள் இன்றைய தமிழ் சமூகத்தின் தலைவிதியை நிர்ணயித்துள்ளன. நிர்ணயிக்கப்போகின்றன. ஏனைய தமிழ் இயக்கங்களையும் அதன் தலைவர்களையும் புத்திஜீவிகளையும் அழிக்குமாறு தமிழ் மக்கள் யாராவது கேட்டார்களா? ராஜீவ்காந்தியை கொலை செய்யும்படி எந்த தமிழனாவது கேட்டானா? அல்லது சற்றேனும் எதிர்பார்த்தானா? முஸ்லீம் மக்களை 24 மணி நேரத்திற்குள் வெளியேறும்படி எந்தத் தமிழன் கேட்டான்? 2006ல் நடந்த தேர்தலில் ரணிலை தோற்கடித்து மகிந்த ராஜபக்சவை பதவியில் அமர்த்தியது தமிழ் மக்களா? இல்லவே இல்லை.

இவையெல்லாம் ஈழத்தமிழர்களின் நலனிற்காக என்று சொல்லி எடுக்கப்பட்ட முடிவுகள். முற்றிலும் தவறான முடிவுகள். ஈழத் தமிழர்களின் இன்றைய பரிதாப நிலைக்கு சிங்கள அரசு தான் பொறுப்பாக இருந்தால் மேற்குறிப்பிட்ட வரலாற்றுத் தவறுகளுக்கு யார் பொறுப்பானவர்கள்? அது சரி போகட்டும். இந்த வரலாற்றுத் தவறுகளை சம்பந்தப்பட்டவர்கள் உணர்கிறார்களா? அல்லது தம்மை திருத்தி அமைக்கிறார்களா? நிச்சயமாக இல்லை.

தமிழீழம் அமைகிறதோ இல்லையோ புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் தமிழர்களில் 99 வீதமானோர் ஹொலிடேக்கு போய்வருவார்களே யொழிய ஒரு காலகட்டத்திலும் தமிழீழத்திற்கு திரும்பிச் சென்று வாழப்போவதில்லை. அதிலும் எமது அடுத்த சந்ததியினர் திரும்பிப்போவார்கள் என்ற பேச்சுக்கே இடமில்லை you know.

புலம்பெயர் நாடுகளில் இன்று தமிழ் அமைப்புக்கள் ஒரு சர்வதிகார பாணியிலான உச்சியில் அதிகாரத்தைக் கொண்ட அலகினுள் உள்வாங்கப்படுகின்றனர். தமிழ் பாடசாலைகள், களியாட்ட வைபவங்கள், விளையாட்டுப் போட்டிகள், பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சிகள், அகதி அமைப்புகள், சமய ஸ்தாபனங்கள், கோயில்கள் அனைத்தும் அரசியல் முலாம் பூசப்பட்டு உச்சியிலே அதிகாரத்தைக் கொண்ட ஓர் பிரமிட் அமைப்பினுள் கொண்டுவரப்படுகின்றது.

ஒரு ஸ்தாபனத்தை அல்லது கட்சியை அல்லது இயக்கத்தை மையமாக வைத்து இந்த அதிகார அலகு கட்டப்படுகின்றது. எந்த சமுதாய அமைப்பின் எதிர்காலமும் சம்பந்தப்பட்ட அலகின் வளர்ச்சி அல்லது வீழ்ச்சியைப் பொறுத்து வளர்ச்சியையோ வீழ்ச்சியையோ சந்திக்கிறது. இது ஒரு ஆரோக்கியமான சமூக அமைப்பு அல்ல. பலமான சமூக அமைப்பும் அல்ல.

மாறாக சமூக அமைப்புகளின் அதிகாரங்கள் கீழிருந்து மேலே செல்ல வேண்டும். சமூக ஒற்றுமையையும் பன்முகத்தன்மையையும் மையமாக வைத்து சமூக அமைப்புகள் கட்டியெழுப்பப்பட வேண்டும். மக்களின் சுயதெரிவு, சுயசிந்தனை என்பன சமூகக் கட்டமைப்பின் மிக அவசியமான அம்சங்கள்.

எமது விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியுடன் இந்த அம்சங்கள் உட்பட மக்களின் உரிமைகள் ஒவ்வொன்றாக பறிக்கப்பட்டு விட்டது. அண்ணன் முதல் தம்பி வரை கேள்வி கேட்பது என்பது மிக மோசமான குற்றச் செயலாகிவிட்டது. எண்பதுக்கள் வரை இந்த மிதவாதத் தலைவர்கள் விட்ட சாபங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. ‘so and so க்கு இயற்கை மரணம் இல்லை’ என்று அண்ணன் சொல்ல தம்பி போட்டுத் தள்ளிப் போட்டு வந்து கையில கீறிப் பொட்டும் வைத்துவிட்டுப் போவார். இதன் எச்சசொச்சங்கள் மூன்று சகாப்தங்கள் கடந்தும் புலம்பெயர் நாடுகளில் இன்னும் குறைவில்லாமல் இருக்கிறது.

ஈழத் தமிழர்களிடையே பல எழுத்தாளர்கள் இருந்தபோதும் சோபா சக்தி மிகவும் அறியப்பட்ட ஒரு முன்னணி எழுத்தாளர். அவருக்கு கொலைமிரட்டல் விடப்பட்டு உள்ளது. பாரிஸ் ஈழநாடு ஆசிரியர் குகநாதனுக்கு கொலை மிரட்டல் விடப்பட்டு உள்ளது. ஏன் ? புலம்பெயர்ந்த மண்ணில் அரசியல் அடைக்கலம் கேட்டுவிட்டு அந்த மண்ணில் உள்ள ஜனநாயக உரிமைகளையும் அனுபவித்துக் கொண்டு மற்றவர்களுக்கு கொலை மிரட்டல் விடும் தைரியம் யாருக்கு வரும்.

திருமணம் செய்யத் தடை, கட்டாய ஆட்சேர்ப்பு, வெள்ளைவான் கடத்தல்கள், சிறுவர் படையணியில் சேர்ப்பு, படுகொலை இதற்கு மத்தியல் வாழும் தொப்பிழ் கொடி, அறுணாக் கொடி உறவுகளுக்காக காதலர் தினத்தன்று நேசமுடன் ஐபிசிதாசன் போட்ட பாட்டுகளைவிட பயனுள்ள எதையாவது செய்ய முடியுமா எம் தமிழ் உறவுகளே. நாம் பெரிதாக என்ன செய்ய முடியும்? எமது பிள்ளைகளை கிறம்மர் ஸ்கூலுக்கோ பிறைவேட் ஸ்கூலுக்கோ அனுப்பறதே பெரும் போராட்டமா இருக்கு இதுக்குள்ள சின்ன gap கிடைச்சா கடைசிப் போர், இறுதிப் போர் பற்றி இரண்டுபேருக்கு தாளிக்கலாம். அவ்வளவுதான் ☑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர்களின் போராட்டத்தை அங்கிக

எழுபதுகளின் இறுதியில் 22,000க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட போராட்டக் குணாம்சம் மிக்க ஒரு தொழிற்சங்கமாக இலங்கை ஆசிரியர் சங்கம் மிளிர்ந்தது. 1975இல் நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மகாநாட்டில், பாரம்பரியப் போக்கை மாற்றி, சங்கம் போராட்ட குணாம்சமுடைய நிலை அடைவதற்கேற்ற பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றில் ஒன்று, ஆசிரியர்கள் இந்நாட்டின் பரந்துபட்ட தொழிலாளி, விவசாய மக்களுடன் ஒன்றிணைந்து போராட வேண்டுமென்பதாகும். பிறிதொன்று ஆசிரியர்களின் கோரிக்கைகள், பேச்சுவார்த்தைகளினால் தீர்க்கப்படாதவிடத்து அதிகார வர்க்கத்திற்கெதிராக நேரடியான தொழிற்சங்க நடவடிக்கைகளில் இறங்க வேண்டுமென்பதாகும். இதன்மூலம் முன்பு நிலவிய பத்தாம் பசலிக் கொள்கைகள் காலாவதியாகின. இவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தோழர் எச்.என்.பெர்னாண்டோ பெரும் பணியாற்றியிருந்தார். இதனைத் தொடர்ந்து பல்வேறு சங்கங்களுடன் இணைந்து பல போராட்டங்களில் சங்கம் ஈடுபட்டது. தேசிய இனப்பிரச்சினையிலும் அது முன்னின்று போராட்டங்களை நடாத்தியது.

வங்கி முற்பணப் போராட்டம், கல்வி அமைச்சை முற்றுகையிட்ட போராட்டம் எனப் பல போராட்டங்களிலும் இலங்கை ஆசிரியர் சங்கம் ஈடுபட்டு வந்தது.

1977இல் யூ.என்.பீ. கட்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நாட்டில் இனக்கலவரம் வெடித்தது. கட்சியின் தலைவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன போரா சமாதானமா என்ற கோஷத்தை எழுப்பிப் போரை நடத்தினார். இனப்பிரச்சினை கூர்மையடைந்து நாட்டின் எரியும் பிரச்சினையாக வடிவமைந்தது. இதனால் தமிழர் ஒரு தேசிய இனம், அவர்களின் சுயநிர்ணய உரிமை ஏற்கப்பட வேண்டுமென்ற குரல் வடக்கில் பொது மக்கள் மத்தியில் வலுப்பெறத் தொடங்கிற்று.

1977இல் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த மகாநாடு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர். இம்மகாநாட்டில் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமை தொடர்பான பிரேரணை முன்மொழியப்பட்டது. கொள்கையளவில் இப் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டு மாவட்டக் கிளைகள் தோறும், விவாதித்த பின்பு மீண்டும் மறு ஆண்டு மகாநாட்டில் சமர்ப்பிப்பதென தீர்மானிக்கப்பட்டது.

கல்வி நலன்கள் மட்டுமன்றி, தேசிய நல உணர்வுகளையும் சமூகச் சிந்தனைகளையும் தன்னகத்தே கொண்டிருந்த இலங்கை ஆசிரியர் சங்கம் இவ்விடயத்தில் அதிக கவனம் செலுத்தியது. பீ.ஏ.காதரின் பொறுப்பில் தேசிய இனப்பிரச்சினை அலசி ஆராயப்பட்டது. சாந்திகுமார் போன்றோர் தெளிவான கருத்துக்களை முன்வைத்தனர். மாவட்டங்கள் தோறும் விவாதங்கள், கருத்தரங்குகள் என்பன இடம்பெற்றன. பல இனங்களைக் கொண்ட எமது நாட்டில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலம் தான் புரையோடிப்போன இனவாதத்தைக் களையமுடியும், நாட்டின் ஐக்கியத்தை பேண முடியும், இதன் மூலமே நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல முடியுமென சங்கம் தீர்க்கமான முடிவிற்கு வந்தது. இதில் தோழர் எச்.என்.பெர்னாண்டோவின் பங்குப் பணி மகத்தானது.

மறு ஆண்டு 1978இன் வருடாந்த மகாநாடு காலி மாநகர மண்டபத்தில் இடம்பெற்றது. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். தோழர் எச்.என். பெர்னாண்டோ அந்நாளில் சங்கச் செயலாளராக விளங்கியவர். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற பிரேரணையை முன் மொழிந்து உரையாற்றினார். பீ.ஏ.காதர் அதனை வழிமொழிந்தார். விரிவான விவாதம் இடம்பெற்றது. பெரும்பான்மைசமூகத்தைச்சேர்ந்த

## தோழர் எச்.என்.பெர்னாண்டோ (2)

**வே. சிவராசா, முன்னாள் தலைவர், இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ் மாவட்டக் கிளை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரித்த பெரும்பான்மையினத் தலைவர்

பிரதிநிதிகளையே அதி பெரும்பான்மையாகக் கொண்டிருந்த மகாநாட்டில் பிரேரணை ஏகமன தாகவே ஏற்றுக்கொள்ளப்பட்டதெனக் கருதுமளவிற்கு அங்கீகரிக்கப்பட்டது. விரல் விட்டு எண்ணக்கூடியஒருசிலரேஎதிர்த்துவாக்களித்தனர். இனப்பிரச்சினை கூர்மையடைந்த பின்பு, தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொண்ட முதலாவது தொழிற்சங்கம் இலங்கை ஆசிரியர் சங்கம் என்பது குறிப்பிடத்தக்கது. இத்தீர்வை முன்னெடுத்துச் செல்வதில் தோழர் எச்.என். பெர்னாண்டோ அர்ப்பணிப்புடன் ஈடுபட்டார்.

## யூலை 80 பொது வேலை நிறுத்தம்

பல்வேறு தொழிற் சங்கங்களிடையே புரிந்துணர்வை வளர்த்து ஐக்கியத்தைப் பேண முற்பட்ட காலமது. யூ.என்.பீ. அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கைகளினால் வாழ்க்கைச் செலவு வேகமாக அதிகரிக்கத் தொடங்கியது. தொழிலாளர்கள் சுமை தாங்காது திண்டாடினார்கள். தொழிற்சங்கங்கள் பலவும் ஒன்றிணைந்து முன்னூறு ரூபா சம்பள உயர்வுக் கோரிக்கையை அரசிடம் சமர்ப்பித்தன. அதனை ஏற்க மறுக்கவே 1980 யூலை மாதத்தில் பொது வேலை நிறுத்தம் ஒன்றினை மேற்கொண்டனர். இப்போராட்டத்தில் இலங்கை ஆசிரியர் சங்கமும் தன்னை இணைத்துக்கொண்டது. முதற் தடவையாக பல்லாயிரக்கணக்கான ஆசிரியர்கள் உணர்வுபூர்வமாக பொது வேலை நிறுத்தத்தில் பங்குபற்றினர். தொழிலாளர்களுடன் ஐக்கியப் பட்டு போராடுவதன் மூலமே ஆசிரியர் சமூகத்திற்கு விமோசனம் ஏற்படும் என்பதை வெளிக்காட்டினர்.

தொழிலாளரின் ஐக்கியத்தையும் போராட்ட முனைப்பையும் கண்டு யூ.என்.பீ. அரசு அச்சங் கொண்டது. மிக மிலேச்சத்தனமாக பொது வேலை நிறுத்தத்தை முறியடிக்க அரசு முற்பட்டது. அரசியற் காரணங்களுக்கான வேலை நிறுத்தமென அதற்கு முலாம் பூசப்பட்டது. வேலை நிறுத்தம் ஆரம்பமான அன்று சமூகமளிக்காத ஊழியர்கள் எவரையும் தொடர்ந்து சேவை செய்ய அனுமதிக்கக் கூடாது என்ற பணிப்புரைகள் அமைச்சுத் தலைவர்களால் வழங்கப்பட்டன. ஊழியர்கள் கதவடைப்புக்கு உட்பட்டனர். பல்வேறு துறைகளைச் சார்ந்த 40,000க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேதனத்தையும் வேலையையும் இழந்தனர். தொழிற்சங்கத் தலைவர்கள் திட்டமிட்டுப் பழிவாங்கப்பட்டனர். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிற்சங்கங்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன. அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்புடையதென்ற கருத்தையே நிராகரித்து ஒவ்வொரு அமைச்சரும் தாம் விரும்பியவாறு வேலை நிறுத்தக் காரர்களை மீண்டும் வேலைக்கு அழைக்கலாம் என்ற போக்குக் கடைப்பிடிக்கப்பட்டது. கல்வி அமைச்சு ஆசிரியர்களை மிகத் தாமதமாகவும் ஒழுங்கற்ற முறையிலும் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொண்டது. இதனால் தொழிற் சங்கங்களின் செயற்பாடுகள் பின்னடையலாயின.

மக்கள் விடுதலை முன்னணி (JVP) இப்பொழுது வேலை நிறுத்தத்தை ஆதரிக்கவில்லை. தோழர் எச்.என். இந்த நிலைப்பாட்டை வன்மையாக விமர்சித்தார். அதனால் அவர் அவ்வியக்கத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டார். அரசின் கெடுபிடிகளும் ஓயவில்லை. கொழும்பில் அவரது இருப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டது.

## தோழரின் யாழ்ப்பாண வருகை.

தோழர் எச்.என். பலமுறை யாழ்ப்பாணம் வந்து சங்க வளர்ச்சிக்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். இக்காலகட்டத்தில் அவர் ஒரு முறை யாழ்ப்பாணம் வந்த பொழுது தவிர்க்கமுடியாதவாறு பலமாதங்கள் அங்கு தங்கியிருக்க நேர்ந்தது.

1983இல் நாட்டை உலுப்பிய பயங்கர இனக் கலவரம் இடம்பெற்று முடிந்த வேளையில், வடக்கில்பேரினவாதத்திற்குஎதிராகஇளைஞர்கள் ஆயதமேந்தி தமிழ் இனத்தின் விடுதலைக்காகப் போராடிய காலமது. TELO, LTTE, PLOTE, EPRLF, EROS போன்ற பல இளைஞர் அமைப்புக்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தன. ஆயுதப் படைகள் கூட அக்காலகட்டத்தில் முகாம்களிலேயே முடங்கிக் கிடந்தன. பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த எவரும் யாழ்ப்பாணத்திற்குச் செல்வதில்லை. எச். என். உயிராபத்தின்றி மீண்டும் கொழும்புக்குத் திரும்பமாட்டார் என்ற உணர்வே அங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பலரிடமும் குடிகொண்டிருந்ததை பின்பு அறியமுடிந்தது. ஒருசில இடர்பாடுகள் ஏற்பட்ட பொழுதும் ஆபத்தெதுவுமின்றி எச்.என். தெற்கே திரும்பினார். இதன் இரகசியம் என்ன?

பல வருடங்களிற்கு முன்பே தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை இலங்கை ஆசிரிய சங்கம் ஏற்றுக் கொண்ட உண்மையை வடக்கில் இளைஞர்களும் மற்றவர்களும் நன்கு அறிந்திருந்தனர். பெயரளவில் மட்டுமன்றி தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமென சங்கம் முனைப்புடன் செயற்பட்டதும் அதற்காக எச்.என். பெரிதும் அர்ப்பணிப்புடன் அயராது செயற்பட்டு வந்ததும் வடக்கில் நன்கு தெரிந்த விடயமாக இருந்தது. அதனால் தோழர் எச்.என். மக்களின் நேச சக்தியாகக் கணிக்கப்பட்டு அனைவரின் ஆதரவையும் பெற்று இங்கே வாழ்ந்தார்.

*பல இனங்களைக் கொண்ட எமது நாட்டில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலம் தான் புரையோடிப்போன இனவாதத்தைக் களையமுடியும், நாட்டின் ஐக்கியத்தை பேண முடியும், இதன் மூலமே நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல முடியுமென சங்கம் தீர்க்கமான முடிவிற்கு வந்தது.*

இலங்கை ஆசிரிய சங்கத்தின் வெளியீடான 'ஆசிரியர் குரல்' பத்திரிகையில் இனப்பிரச்சினை தொடர்பாக 'கல்வியும் இன முரண்பாடும்' என்ற தோழர் எச்.என். எழுதிய கட்டுரையின் விடயங்கள் சில இங்கு கவனத்திற்குரியது.

இக்கட்டுரையானது, இலங்கை ஆசிரிய சங்கம் முக்கிய பங்களிப்புச் செய்த சனநாயக சமூகத்திற்கான ஆசிரியர்கள் மாணவர்கள் அமைப்பினால் தென்னிலங்கையில் வெளியிடப்பட்ட அறிக்கையின் சாராம்சமாக வரையப்பட்டது.

1.இலங்கை ஒரு பல்லின, பலமத மக்களை உள்ளடக்கியதாக இருந்தும் அதன் சமூக பொருளாதார அமைப்பானது பேரினவாதத் தன்மையுடையதாகும்.

2.முதலாளித்துவ வர்க்கத்தினால் தத்துவார்த்த ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கொடுக்கப்படும் தலைமைத்துவமே இன்று இலங்கையில் நிலவும் பேரினவாத சமூக பொருளாதார அமைப்பு முறைக்கான உண்மைக் காரணமாகும்.

3.இலங்கையின் தேசிய இயக்கத்தின் ஒரு தலைப்பட்சமான ஆதிக்கப் போக்கின் காரணமாக பெரும்பான்மை சிங்கள மக்கள் மத்தியில் சிறுபான்மையினரின் உரிமையை மறுதலிக்கும் இனவாத உணர்வு உருவாகியது. இதன் விளைவாகத் தமிழர் மத்தியில் தமது அடிப்படை உரிமைக்காகப் போராடும் இன உணர்வு தோன்றலாயிற்று.

4. இலங்கையின் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் தலைமைகளால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் உரிய முறையில் வெற்றி அளிக்காத நிலையில் ஆயதம் தாங்கிய தமிழ் இளைஞர்களாலும் மாணவர்களாலும் இது தேசிய விடுதலைப் போராட்டமாக முன்னெடுக் கப்பட்டது.

5.மொழி, மதம், கலாசாரம். தாயகம் என்பவற்றைப்பேணும்வகையில்தனி அரசினை நிறுவுவதற்கான போராட்டத்திற்குரிய ஆயுதந் தாங்கிய தேசிய விடுதலை இயக்கத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் பிறப்பித்தமையே இவ்வின முரண்பாட்டின் தர்க்கரீதியான முடிவாகும்.

## பாதுகாப்பு நிதிக்கு எதிரான போர்க்கொடி

இளைஞர்களின் இன விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலங்களில் அதனை அடக்கி ஒடுக்க அரசு மேற்கொண்ட முயற்சிகளை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கத் தவறவில்லை.

போராட்டத்தை நசுக்கி ஒடுக்கும் நோக்குடன் செயற்பட்டவேளை அரசு, அரச ஊழியர்களிடம் இருந்த 'பாதுகாப்பு நிதி' என்ற போர்வையில் பணம் அறவிட முயன்றது. இலங்கை ஆசிரிய சங்கம் ஏனைய ஆசிரிய சங்கங்களுடன் இணைந்து இந்நடவடிக்கையை வன்மையாக எதிர்த்தது. நிதி அறவிட அங்கத்தவர்கள் சம்மதம் தெரிவிக்கக்கூடாதென செயலாளர் எச்.என். பகிரங்க அறிக்கையொன்றினை வெளியிட்டார். தெற்கில் இதற்கு மறுப்புத் தெரிவித்த பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் பழிவாங்கும் நோக்குடன் இடமாற்றம் செய்யப்பட்டனர். சங்கம் அதனை எதிர்த்துச் செயற்படவே இடமாற்றம் கைவிடப்பட்டது. எனினும் செயலாளர் எச்.என். பெர்னாண்டோ விசாரணை என்ற பெயரில் பொலிஸ் தலைமையக நாலாம் மாடிக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அழைக்கப்பட்டு உடல் உளத்தாக்கத்துக்கு உள்ளாக்கப்பட்டார். பிற்காலத்தில் அவர் நோய்வாய்ப்பட்டு ஈற்றில் தனது ஐம்பதாவது வயதில் அவர் காலமாவதற்கும் இதுவே காரணமாக அமைந்ததெனலாம்.

இளைஞர்களின் போராட்டம் வளர்ச்சிபெற்று இயக்கங்களுக்கிடையில் முரண்பாடு வலுப்பெற்று வந்த காலத்தில், LTTE தலைவர் பிரபாகரனும், PLOTE தலைவர் உமாமகேஸ்வரனும், இந்தியாவில் இருந்த வேளை, ஒரு சந்தர்ப்பத்தில் இருவரும் ஒருவர் மேல் ஒருவர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். சிறு காயங்களுடன் அவர்கள் தப்பித்தபொழுதும் இந்திய காவல் துறையினரால் பின்னர் இது தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டனர். இலங்கை அரசாங்கம் இரு இயக்கத் தலைவர்களையும் தம்மிடம் ஒப்படைக்கும்படி வேண்டியது. இவ்வேளை தோழர் எச்.என். பெர்னாண்டோ தென்னிலங்கையில் இருந்து கொண்டே மிகத் துணிவுடன் சங்கத்தின் சார்பில் ஓர் பகிரங்க வேண்டுகோளைப் பத்திரிகை மூலம் இந்திய அரசாங்கத்திற்கு விடுத்திருந்தார்.

அதில் 'தமிழ் இளைஞர்களின் போராட்ட வழியினை, முழுமையாக ஏற்றுக்கொள்ளாத விடத்தும், விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் நோக்குடன், தமிழ் இளைஞர்களை இலங்கை அரசு பழிவாங்கியும் அழித்தும் வருவதால், அவ்விரு தலைவர்களையும் இலங்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டாம்' எனத் தனது அறிக்கையில் கேட்டிருந்தார்.

### கல்வி அமைச்சு முற்றுகை

1977இல் ஐக்கிய தேசியக் கட்சி (UNP) பதவிக்கு வந்த பின்னர், நிசங்க விஜயரட்னா கல்வி அமைச்சராக நியமிக்கப்பட்டார். என்றும் இல்லாதவாறு ஆசிரியர்கள் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டனர். கஷ்டப் பிரதேசங்களிற்கும் தூர இடங்களுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டனர். இடமாற்றச் சபைகள் நிறுத்தப்பட்டன. கல்வி அமைச்சிற்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்டது. ஆசிரியர்களை கீழ்நிலைக்குத் தள்ளிய இச்செயற்பாட்டினை ஆட்சேபித்து, கல்வி அமைச்சிற்கு முன்பு ஒரு நாள் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் ஒழுங்கு செய்தது. அதனை முறியடிப்பதற்காக அன்று கல்வி அமைச்சு மூடப்பட்டது. யாரும் செல்ல முடியாத இடமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. முட்கம்பித் தடைகள், அமைச்சைச் சுற்றி வீதிகள் தோறும் அமைக்கப்பட்டன. கலகம் அடக்கும் பொலிசார் பெருந்தொகையில் அழைக்கப்பட்டு நிறுத்தப்பட்டனர். குதிரைகளில் ஏற்றப்பட்ட நிலையிலேயே பொலிசார் காவலில் ஈடுபட்டனர். மாவட்டத்தில் அமைந்த பல்வேறு தொகுதிகளிலிருந்தும் அதில் பங்குபற்ற வந்த ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் துரத்தப்பட்டனர். இச்செயல்களை ஜீரணிக்க முடியாத ஆசிரியர்கள் கல்வி அமைச்சிற்கு அண்மையிலுள்ள பொது வெளிகளில் ஒன்று சேர்ந்தனர். ஆசிரிய சங்கங்களின் சம்மேளனத் தலைவர்கள் கூடி, சில வியூகங்களை அந்தரங்கமாகவகுத்து ஆசிரியர்களை வழி நடத்தினர். தடைகள் அனைத்தையும் தந்திரோபாய முறையில் முறியடித்து, ஈற்றில் கல்வி அமைச்சு நுளைவாயிலருகேயே ஆசிரியர்கள் பல்வேறு சுலோக அட்டைகளுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பேச்சுச் சுதந்திரம் மறுக்கப்பட்டதை வெளிக்காட்டத் துணியால் வாய்களை மூடிக்கட்டியிருந்தனர். கலகப் பொலிசாரின் நடவடிக்கைகளுக்கு எதிர்த்து முகம் கொடுத்தனர். பின்னர் ஊர்வலமாகச் சென்று 'ஹைட்பார்க்' மைதானத்தில் கல்வி அமைச்சினதும், அரசினதும் செயலைக் கண்டித்து எதிர்ப்புக் கூட்டம் நடத்தினர். ஆசிரியர்களின் துணிகரமான இப் போராட்டங்களில் எல்லாம் இலங்கை ஆசிரிய சங்கம் முக்கிய பங்காற்றி வந்தது கண்கூடு. ☑

> *இலங்கையின் இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் தலைமைகளால் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் உரிய முறையில் வெற்றி அளிக்காத நிலையில் ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்களாலும் மாணவர்களாலும் இது தேசிய விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப்பட்டது.*

> *மொழி, மதம், கலாசாரம், தாயகம் என்பவற்றைப் பேணும் வகையில் தனி அரசினை நிறுவுவதற்கான போராட்டத்திற்குரிய ஆயுதந் தாங்கிய தேசிய விடுதலை இயக்கத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் பிறப்பித்தமையே இவ்வின முரண்பாட்டின் தர்க்கரீதியான முடிவாகும்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளியே உள்ளீர்கள். இந்நிலையை நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் ?

ஆ.சங்கரி: பாராளுமன்றத்தில் இருந்து நான் சாதிக்க முடியாததை வெளியே இருந்து சாதிக்கின்றேன். இந்த வசதி வாய்ப்பு இருந்தபடியால் தான் எனக்கு இந்த விருதும் கிடைத்தது.

தேசம்: நீங்கள் பாராளுமன்றத்தில் இருந்திருந்தால் உங்கள் குரலுக்கு அறிக்கைகளுக்கு இருக்கும் மதிப்பு அங்கிகாரம் அதிகமாக இருந்திருக்கும் அல்லவா ?

ஆ.சங்கரி: அப்படித்தான் எல்லோரும் நினைக்கிறார்கள். ஆனால் எனக்கு இந்த சர்வதேச சமூகத்துடைய அங்கிகாரம் இன்றைக்கு நேற்றல்ல என்றைக்கோ கிடைத்து விட்டது. நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து விட்ட அறிக்கைகளிலும் பார்க்க நான் பாராளுமன்ற உறுப்பினராக இல்லாமல் இருக்கும் போது விட்ட அறிக்கைகளுக்கு மதிப்பும் கூட. மவுசும் கூட.

**த ஜெயபாலன்**

> "1976 தமிழீழப் பிரகடனம் ஒரு தந்திரோபாய வழியேயொழிய அன்றும் சரி இன்றும் சரி அது எனக்கு ஒரு நியாயமான தீர்வாகத் தெரியவில்லை."

# ஆனந்த சங்கரியுடன் ஒரு அலசல்

தேசம்: யுனெஸ்கோ விருது உங்களுக்கு கிடைத்ததை நீங்கள் எப்படி உணர்கிறீர்கள் ?

அ.சங்கரி: யுனஸ்கோ விருது கிடைத்தது ஒரு ஆச்சரியம். ஏனென்றால் நான் அதை எதிர்பார்த்து இருக்கவில்ல. எனது கடைமையைத் தான் நான் செய்தேன். விருது கிடைத்ததில் எனக்கு ஒரு திருப்தி என்னவென்றால் என்னுடைய நிலைப்பாட்டை உலகம் அங்கிகரித்துள்ளது. தமிழ் பத்திரிகைகள் பலவாறு எல்லாம் எழுதி இருந்தார்கள். இது ஆண்டவனாய் பார்த்து வரவு செலவுக்கணக்கு முடித்தது மாதிரி ஒரு balance sheet.

தேசம்: நீண்ட பாராளுமன்ற அரசியல் வழியால் வந்த நீங்கள் இன்று பாராளுமன்றத்திற்கு

தேசம்: சுதந்திர இலங்கையில் படிப்படியாக தமிழ் மக்கள் ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்ட ஒரு காலகட்டத்தில் நீங்கள் அரசியலில் ஈடுபட்டிருக்கிறீர்கள். இந்த இனஒடுக்குமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாமற் போனது நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்திய கட்சிகளின் வரலாற்றுத் தோல்வி என்று குறிப்பிடலாமா ?

ஆ.சங்கரி: எனக்கு தோல்வி என்று சொல்ல முடியாது. ஆரம்பத்தில் இருந்து இடதுசாரிக் கொள்கையில் இருந்து வந்தவன். 1950, 52ல் இடதுசாரிகளுடன் எனது அரசியல் வாழ்க்கை ஆரம்பித்து விட்டது. 1959, 60, 65ல் தேர்தலில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போட்டியிட்டேன். 1965 வரைக்கும் எனது அரசியல் இடதுசாரிகளுடன் தான் இருந்தது. அதன் பின்தான் வலதுசாரிக் கட்சிக்கு மாறினேன். அப்போது கூட தமிழ் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்ததற்கு முக்கிய காரணம் அது தேசியக்கட்சி என்றபடியால் அது ஒரு பிரிவினைவாதக் கட்சியல்ல.

1970ம் ஆண்டுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியில் இருந்து போட்டியிட்டு பாராளுமன்றம் சென்றேன். அதிலிருந்து தமிழ் மக்களுக்கு எந்த பிரயோசனமும் கிடைக்கவில்லை என்பதால் 1972ல் தந்தை செல்வாவின் அழைப்பை ஏற்று தமிழ் காங்கிரசும் தமிழரசுக் கட்சியும் ஒன்று சேர்ந்த போது அவர்களுடன் இணைந்து கொண்டேன். தமிழர் கூட்டணி உருவாகியது. பின் தமிழர் விடுதலைக் கூட்டணி என பெயர்மாற்றம் செய்யப்பட்டது. அன்றில் இருந்து இன்று வரைக்கும் நான் எனது பங்களிப்பைச் செய்து வருகிறேன். தோல்வி எற்பட்டது எனக்கல்ல கட்சிக்கு.

தேசம்: என்னுடைய கேள்விக்கான விடை வரவில்லையே?


ஆ.சங்கரி: அந்த காலகட்டத்தில் நாங்கள் எடுத்த முயற்சிகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வழிவகுத்திருக்க வேண்டும்.

தேசம்: ஆனால் வழிவகுக்கவில்லையே ?

ஆ.சங்கரி: அந்தந்த காலத்திலே இருந்த அரசாங்கங்களுடைய கவலையீனமும் அசமந்தமும் தான் அதற்குக் காரணம். அதனுடைய விளைவைத் தான் நாங்கள் இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். கூட்டுத்தலைமையூடாக எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை வைக்கத் தவறியதால் தான் இன்று இவ்வளவு கஸ்டங்கள். சேதங்கள், உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளது.

தேசம்: உங்களுடைய பாராளுமன்ற அரசியல் அனுபவத்தில், காலத்திற்கு காலம் ஆட்சிக்கு வந்த அரசியல் கட்சிகளிடையேயும் அதன் தலைமைகளிடையேயும் என்ன மாற்றத்தை நீங்கள் காண்கிறீர்கள் ?

ஆ.சங்கரி: சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக வரும் வரைக்கும் ஏமாற்றுக்கள். தனிச்சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது முதல் இனப்பிரச்சினை ஆரம்பித்தது என்று வைத்துக்கொண்டால், பண்டா - செல்வா ஒப்பந்தம் செய்யப்பட்டு அது அமுல்படுத்தப்பட்டிருந்தால் நிலைமை இவ்வளவு மோசமாகி இராது. அதைக் குழப்பியது யூஎன்பி. யூஎன்பி ஆட்சிக்கு வந்த பின் டட்லி - செல்வநாயகம் செய்து கொண்ட ஒப்பந்தம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியால் குழப்பப்பட்டது. யுஎன்பி ஜே ஆர் ஜெயவர்த்தன ஆட்சிக்கு வந்த போது மாவட்ட அபிவிருத்தி சபை உருவாக்கப்பட்டது. அபிவிருத்தி என்ற சொல்லை நீக்கிவிட்டு மாவட்டசபையாக அதிகாரத்தைக் கூட்டி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழங்கும்படி நாங்கள் எவ்வளவோ மன்றாடினோம். ஒரு கையால் கொடுத்து மறுகையால் பறித்த மாதிரி ஜே ஆர் ஜெயவர்த்தனா தானே உருவாக்கி தானே அழித்துவிட்டுச் சென்றார். முதல் முதலாக ஒரு சிங்களத் தலைமை தமிழ் மக்களுக்கு ஏற்கக் கூடிய தீர்வை வைத்த பெருமை சந்திரிகா குமாரதுங்கவிற்கே உரியது. 1995ல் சந்திரிகா அவர்கள் வைத்த தீர்வுத் திட்டத்தை நாங்கள் எல்லோரும் பாராட்டினோம். எல்லோரும் வரவேற்றார்கள். அதைக்கூடக் கெடுத்தது யுஎன்பி.

அதற்குப் பிறகு முதற் தடவையாக 2005 ஜனாதிபதித் தேர்தலில் வரலாற்றில் என்றுமில்லாத வகையில் சமஸ்டியை தீர்வாக வைத்து யுஎன்பி தேர்தலில் போட்டியிட்டு 49.7 விதம் வாக்குகளைப் பெற்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை எடுத்துக் கொண்டாலும் கூட 2005 மாநாட்டில் சந்திரிகா பண்டாரநாயக்கா ஜனாதிபதியாக இருந்தார், தற்போதைய ஜனாதிபதி பிரதமராக இருந்தார், சமஸ்டி ஆட்சிமூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

துரதிஸ்டவசமாக தமிழ் மக்கள் செய்த சாபக்கேடு என்று தான் நான் சொல்வேன் சந்திரிகா குமாரதுங்க அவர்களுக்கும் மகிந்த ராஜபக்ச அவர்களுக்கும் இடையே ஏற்பட்ட தப்பான அபிப்பிராய பேதங்கள் மகிந்த ராஜபக்சவை ஜேவிபியோடு ஒப்பந்தம் செய்ய வைத்தது. அதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்வை அமுல்படுத்த முடியாமல் போய்விட்டது.

தேசம்: இன்றைக்கு இரு பிரதான தேசியக் கட்சிகளும் சமஸ்டியை ஏற்றுக்கொள்வதாக இருந்தால் அதை அமுல்படுத்துவதில் பெரிய பிரச்சினை இருக்காதே ?

ஆ.சங்கரி: பிரச்சினையிரக்காது.

தேசம்: ஆனால் அதைச் செய்யவில்லையே ?

ஆ.சங்கரி: சேனாதிராஜா போன்ற தலைவர்கள் என்ன சொன்னார்கள், இப்படித்தான் சிங்களவன் ஏமாற்றுவான் என்று. இது அர்த்தமில்லாத வாதம். இந்த பிரச்சினைக்குத் தீர்வு வரக்கூடுது என்ற தோரணையில் தான் தமிழ் எம்பிக்கள் இருக்கிறார்கள். தீர்வு வரவேண்டும், நல்ல சந்தர்ப்பம் வாய்த்துள்ளது என்ற வி.புலிகள் உண்மையாக மனதார உணர்ந்திருந்தால், இந்த கிளைமொர் மைன் வைத்த ஆட்களை கொல்வது, குண்டடிப்பது போன்ற மோட்டுத்தனமான செயல்களில் ஈடுபடமாட்டார்கள்.

இதைக் குழப்புகிறது யாரென்றால் தமிழ் மக்களுடைய ஏகபிரதிநிதி என்று சொல்லுகின்ற தலைவரும் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும். எல்லாத்துக்கும் வீரம். ஐ நா சபையில புலிக்கொடி பறக்கும் என்றார் ஒருதர், பொங்கலுக்கோ எப்பவோ ஈழம் என்கிறார் ஒருத்தர். இதெல்லாம் தேவையில்லாத கூப்பாடுகள்.

தேசம்: வி.புலிகள் தான் சமாதானம் ஏற்படாமல் தடுக்கிறார்கள் என்று சொல்கிறீர்களா ?

ஆ.சங்கரி: நிச்சயமாக.

தேசம்: நீங்கள் அரசாங்கம் சமஸ்டி அடிப்படையிலான தீர்வுக்குத் வி.புலிகள் தடையாக உள்ளனர் என்கிறீர்கள். ஆனால் ஜனாதிபதி ராஜபக்ச லண்டன் வந்திருந்த போது இனப்பிரச்சினைக்கான தீர்வுபற்றி இலங்கைத் தூதரகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் பலர் வற்புறுத்திய போதும் தனது அரசு ஒரு தீர்வுத்திட்டத்தை முன் வைக்கமாட்டாது என உறுதிபடத் தெரிவித்துள்ளார். சமஸ்டியை ஏற்றுக் கொள்வதைப் பற்றியோ அல்லது அதை நோக்கிப் போவதைப் பற்றியோ எதனையும் கூறவில்லையே ?

ஆ.சங்கரி: அதை நான் ஒத்துக்கொள்கிறேன். அவர் அதை வெளிப்படையாகத் தெரிவிக்க வேண்டும் என்ற அழுத்தத்தை கொடுத்துக் கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன். அன்றைய நிலைமை வேறு. இன்றைய நிலைமை வேறு. அன்றும் அவர் தீர்வுத் திட்டத்தை வைக்கவே மாட்டேன் என்று சொல்லவில்லை. அதற்கான ஒரு குழுவை உருவாக்கி உள்ளார் என்றுதான் சொல்கிறார்.

வி.புலிகள் நாளைக்கு சொல்லட்டும் தமிழீழதைக் நாங்கள் கைவிடுகிறம் சமஸ்டியை நாங்கள் ஏற்கிறம் என்று. நான் உத்தரவாதம் தாறன். சர்வதேச சமூகம் இன்றைக்கு அரசாங்கத்தைக் குறைகூற முடியவில்லை ஏனென்றால் புலிகளின் இடைஞ்சலால். என்றைக்கு புலிகள் சமஸ்டியை ஏற்கிறார்களோ அப்போது நிச்சயமாக சர்வதேச சமூகத்துடைய அழுத்தம் அரசாங்கத்திற்கு வரும்.

தேசம்: வி.புலிகள் முற்று முழுதாக தமிழ் மக்களைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்று அரசாங்கம் கூறுகிறது. அப்படியாயின் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் முன்வைப்பதற்கு மட்டும் அரசாங்கம் ஏன் வி.புலிகளைக் காரணமாகக் காட்டுகிறது ?**

அ.சங்கரி: இப்போது தானே தலைவர் உறுதியாகச் சொல்லி (மாவீரர் தின உரை) இருக்கிறார், ஈழம் தான் முடிந்த முடிவு என்று. ஆனபடியா தன்னுடைய நிலைப்பாட்டை அரசாங்கம் மாற்றலாம். Indian Modelயை அல்லது சமஸ்டியைத் தன்னும் முன்வைத்துத் தீர்க்கலாம். இது ஏற்புடையது. நியாயமானது என்பதை சர்வதேச சமூகம் அதை அங்கிகரிக்க வேண்டும். மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமாயின் அதனைச் சொல்ல வேண்டும். அந்த மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். அதன் பிறகு வி.புலிகள் ஏற்றாலென்ன ஏற்காவிட்டாலென்ன அத்தீர்வுத் திட்டத்தை முன்வைத்து அமுல்படுத்த வேண்டும்.

**தேசம்: அதற்கு அரசு தயாராகவுள்ளது என்று நீங்கள் நம்புகிறீர்களா ?**

ஆ.சங்கரி: அரசாங்கம் தயாராக வரவேண்டும். அதற்கான அழுத்தத்தை நாங்கள் தான் கொடுக்க வேண்டும். அரசாங்கம் அதிலிருந்து தப்பியோட முடியாது. ஒஸ்லோ உடன்பாட்டில் ஒன்றுபட்ட இலங்கைக்குள் சமஸ்டி ஆட்சியை அமுல்படுத்துவதாக அரசாங்கம் உடன்பட்டு உள்ளது. அதற்கே சர்வதேச சமூகமும் அழுத்தம் கொடுக்கிறது. ஐக்கிய இலங்கையை விட்டு வேறுவழியில் இப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது. இரு பிரதான கட்சிகளும் நிச்சயமாக ஒரு தீர்வுக்கு வந்தேயாக வேண்டும் வராவிட்டால் சர்வதேச சமூகத்தின் வெறுப்பைச் சம்பாதிக்க வேண்டி இருக்கும்.

**தேசம்: வி.புலிகள் வடக்கு கிழக்கில் தனியரசு ஒன்றை நடாத்துகிறார்கள். அவர்களிடம் இராணுவம், கடற்படை, விமானப்படையும் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்கள் இதனைக் கைவிட வேண்டிய அவசியமென்ன?**

ஆ.சங்கரி: என்று நீங்கள் சொல்கிறீர்கள். நான் சொல்கிறேன் அப்படியில்லை. உடையாற்ற திருவிழாவில் சடையர் வானம்விட்ட மாதிரி. இவர்கள் (புலிகள்) எப்பிடி அரசாங்கம் நடத்துகிறார்கள். அரிசி அரசாங்கம் கொடுக்கிறது, சீனி அரசாங்கம் கொடுக்கிறது, அகதிகளுக்கு சாப்பாடு அரசாங்கம் கொடுக்கிறது, உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் அரசாங்கம் கொடுக்கிறது. யாருக்கு இந்தக் கதையை சொல்கிறீர்கள். முழுச்செலவும் அரசாங்கம் பார்க்குது. அரசாங்கம் திருவிழாச் செய்ய தம்பி வானம் விடுறார். உலகம் முழுக்க காசு சேர்க்கிறது வி.புலிகள் அரசாங்கம் நடத்தினம் என்று. இவர்கள் சேக்கிற காசு முழுக்க துவக்கு வாங்குவதற்கு எல்லோ.

**தேசம்: லங்கா சமசமாஜக் கட்சியில் இடதுசாரி அரசியலில் நம்பிக்கை வைத்த நீங்கள் அதனைத் தூக்கியெறிந்து ஒரு பிற்போக்கான தேசியக் கட்சியான கொங்கிரஸில் இணைந்து கொண்டது ஏன் ?**

ஆ.சங்கரி: இப்ப இருக்கிறது வலதுசாரிக் கட்சி என்று சொல்கிறீர்களா? பெரிய மார்க்சிசக் கட்சி அல்லாவிட்டாலும் இடதுசாரிப் போக்குள்ள வலதுசாரிக் கட்சி என்றே கூறுவேன். இப்போதுள்ள கட்சி கூட சாதாரண பொதுமக்கள் நாங்கள் தான். பணக்காரர் இல்லை. கட்சி நடத்துவதற்கே காசில்லை. நாங்கள் மார்க்சிசம் பேசவில்லை. ஆனால் எங்களுடைய கட்சியில் உள்ளவர்கள் இடதுசாரிப் போக்குடையவர்கள்.

ஏன் தூக்கியெறிந்தது என்று கேட்டீர்கள், தூக்கியெறியவில்லை, நான் இப்ப உணர்கிறன் அது தப்பு என்று. மூன்று தடவை லங்கா சமசமாஜக் கட்சியில் போட்டியிட்ட நான். லங்கா சமசமாஜக் கட்சி சமஅந்தஸ்திற்காக போராடிய கட்சி. 1956 ஆண்டு சமதர்ச என் எம் பெரேராவுக்கு சமஸ்டிக்கு ஆதரவு கொடுக்கிறார் என்று குண்டெறியப்பட்டதை பலரும் மறந்திருப்பார்கள். அப்பிடி ஒரு கடசியில் நான் சேர்ந்தேன். 1960ல் இரண்டு தரம் 1965ல் ஒருமுறை எலெக்சன் கேட்டேன். தமிழ் பகுதிகளில் இருந்து ஒரு ஆசனம் கூட இடதுசாரிகளுக்குப் போகவில்லை.

**தேசம்: உங்களுக்கும் ஆசனம் கிடைக்கவில்லை.**

ஆ.சங்கரி: கிடைக்கவில்லை. ஒரு தடவை கொம்னியுஸ்ட் கட்சியைச் சேர்ந்த பீற்ற கெனமனுக்கு ஒரு ஆசனம் கிடைத்தது அது 1956ல். எங்கட மக்கள் இடதுசாரிக் கட்சிகளுடைய பிரச்சாரங்களைப் பாவித்தார்களே ஒழிய அவர்களுக்கு தங்களுடைய நல்லெண்ணத்தைக் காட்டுவோம் என்ற எண்ணம் வரவில்லை. தமிழ் மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றைக்கு ஒரு இடதுசாரிக் கட்சி, ஒரு சமசமாஜக்கட்சி உறுப்பினரையாவது பாராளுமன்றம் அனுப்பியிருந்தால் இடதுசாரிக் கட்சித் தலைமை தமிழ் மக்களோடை பற்று பாசத்தோட தொடர்ந்து இயங்கியிருக்கும்.

நான் விட்டுவிட்டு போனதற்கு காரணம் தேர்தல் முடிந்த பிறகு நடந்த ஒரு ஊர்வலத்தில் தொண்டர்கள் சிலர் சாடையான துவசமான கோசம் கிளப்பினார்கள். அது எனக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது. அதைக் காரணமாக வைத்து விலகிவிட்டோம்.

தேசம்: நீங்கள் தனியாக விலகினீர்களா ?

ஆ.சங்கரி: அதோடு கனபேர் விலகிவிட்டோம். அதோடு லங்கா சமசமாஜக் கட்சி படிப்படியாக உடையத் தொடங்கிவிட்டது. ஆனால் இன்று நான் உணர்கிறன் அன்று நாங்கள் செய்தது தப்பு. யாரோ ஒரு தொண்டன் விரக்தியில் கத்தினான் என்பதற்காக தலைமையிலே முழுப் பழியையும் போட்டு தலைமை மாறிவிட்டது என்று சொல்லி நாங்கள் அந்தக் கட்சியில் இருந்து விலகி இருக்கக் கூடாது. அது எனக்கு பிழையாகவே தோண்றுகிறது.

தேசம்: ஏன் தமிழ் மக்களை இடதுசாரிகளால் வென்றெடுக்க முடியாமல் போனது ?

ஆ.சங்கரி: ஏனென்றால் அவ்வளவு துவசமான பேச்சுக்கள். தலைவர்களுடைய பேச்சுக்கள்.

தேசம்: தமிழ் தலைவர்களுடைய பேச்சுக்களா?

ஆ.சங்கரி: அதை மறுக்கேலாது. இடதுசாரிகளையும் மற்றையவர்கள் மாதிரித் தான் பேசினார்கள். அவனும் சிங்களவன் தான் இவனும் சிங்களவன் தான் என்றெல்லாம் விசமத்தனமான பிரச்சாரம் தான் முக்கிய காரணம்.

தேசம்: இன்று இளமையைக் கடந்த பின்னும் தனிமனிதனாக துப்பாக்கி வேட்டுகளுக்கு மத்தியில் ஜனநாயகத்துக்காக குரல் கொடுக்கும் நீங்கள், அன்று துடிப்புள்ள இளைஞனாக இருந்தும் ஏன் கட்சிக்குள் போராட முன்வரவில்லை ?

ஆ.சங்கரி: அப்போது வெளியேற வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டிருந்தது.

தேசம்: நான் கேட்க வருவது என்னவென்றால் பாராளுமன்ற ஆசனத்தைப் பெற்றுவிட வேண்டும் என்பதற்காகவா நீங்கள் தமிழ் தேசியக் கட்சியில் இணைந்தீர்கள் ?

ஆ.சங்கரி: பதவி ஆசைக்காக நான் வரவில்லை. சமஸ்டிக் கட்சியை (தமிழரசுக் கட்சியை) தோற்கடித்து பாராளுமன்றத்திற்கு போனவன். தந்தை செல்வாவின் அழைப்பு எனக்கு நியாயமாகப்பட்டது. தேர்தலில் தோல்வியுற்றிருந்த தலைவர் ஜிஜி பொன்னம்பலம் உட்பட அந்தக் கூட்டணியை ஆதரிக்கும்படி சொன்னபடியால் தான் நான் அந்த கூட்டணியை ஆதரித்தனான். எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. அப்போது வகுப்புவாதம் கொஞ்சம் கூடத்தான். அப்ப தேவையும் கட்டாயமும் இருந்தது.

தேசம்: எழுபதுக்களில் தமிழ் கட்சிகளின் வாக்கு வங்கி மிகவும் பாதிப்பான ஒரு நிலையில் இருந்தது. இந்நிலையில் 1976ல் தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழீழத்தை பிரகடனப்படுத்தியது. இந்தப் பிரகடனம் வாக்கு வங்கியை நிரப்புவதற்கான ஒரு அதிரடி அரசியல் கோஷமா ? அல்லது உண்மையான கட்சி நிலைப்பாடா ?

ஆ.சங்கரி: அந்த கொள்கை விளக்கம் என்னிடம் உள்ளது. தரமுடியும். அந்தத் தீர்மானத்தில், அரசாங்கம் ஒரு நியாயமான மாற்றுத்தீர்வை முன்வைத்தால் அது நியாயமாக எங்களுக்குத் தோன்றினால் நாங்கள் அதை மக்களுக்கு எடுத்துச் சென்று மக்களை ஏற்க வைப்போம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசம்: அரசாங்கம் ஒரு நியாயமான தீர்வை ஏற்படுத்தாததால் தமிழீழமே தீர்வு என்று இதையே தான் வி.புலிகளின் தலைவர் பிரபாகரனும் தனது மாவீரர உரையில் சொல்லி இருக்கிறார்.

ஆ.சங்கரி: சம்ஸ்டி சரியில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறாரர் அவர். அந்த நேரத்தில நாங்கள் சொன்னதற்கும் பிரபாகரன் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. நாங்கள் நியாயமான தீர்வு என்று சொன்னது அந்தநேரத்தில் பண்டா - செல்வா ஒப்பந்தத்தை சொல்லியிருப்போம், டட்லி - செல்வா ஒப்பந்தத்தை சொல்லியிருப்போம். அதோட அண்டிய அன்றுள்ள சூழ்நிலைக்கு ஏற்ற ஒரு தீர்வு.

www.tamilarangam.net

அது ஒரு tactical move ஒரு தந்திரோபாயமாகப் பாவிப்பதற்குத்தான் தமிழீழப் பிரகடனத்தை கொண்டு வந்ததேயொழிய தமிழீழப் பிரகடனம் எனக்கு ஒரு நியாயமான தீர்வாகத் தெரியவில்லை. அன்றும் சரி இன்றும் சரி. செயற்படுத்த முடியாது. பல காரணங்கள் இருக்கு.

முதலாவது தனிநாடு பிரிய இந்தியா சம்மதிக்காது. இரண்டாவது எல்லைப் பிரச்சினை. இதெல்லாம் தெரியாமலலில்லை. தெரிஞ்சும் தான். நாங்கள் அப்படிச் சொன்னபடியால் தான் ஜே ஆர் ஜெயவர்த்தன சொன்னார் தமிழ் மக்கள் தனிநாடு கேட்கிற அளவுக்கு வந்து விட்டார்கள் நாங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று. சொன்னபடி தீர்த்துவிட்டு போயிருக்கலாம். ஆனால் அப்படிச் செய்யவில்லை. உணர்ந்தவர். உணர வைச்சது.

தேசம்: அப்படியானால் கூட்டணித் தலைவர்கள் எல்லோருக்கும் இந்த அபிப்பிராயம் இருந்ததா?

ஆ.சங்கரி: கட்சி என்று ஒரு முடிவை எடுக்கும் போது நாங்கள் அதிலிருந்து விடுபட முடியாது. அப்படியில்லை என்றால் உடைவெல்லோ. தனி ஈழம் ஒரு பொருத்தமான அஅ அன்றைய சூழ்நிலையில் பொருத்தமற்றதாக தெரியவில்லை.

தேசம்: அனால் உங்களுக்கு அன்றைக்கே தெரிந்திருந்தது தானே ?

ஆ.சங்கரி: எனக்கு தெரிஞ்சிருக்கு ஆனா மற்றவைக்கு எப்படியோ தெரியாது. ஆனால் கட்சி ஒரு முடிவெடுத்தால் அதோடு நிற்க வேண்டும்.

தேசம்: தமிழீழப் பிரகடனத்தை தந்திரோபாயத் திட்டமாகவே கூட்டணி வைத்ததாகக் கூறுகிறீர்கள். அப்படியானால் கூட்டணிக்குப் பின் வந்த தமிழ் இளைஞர்கள் கூட்டணி தமிழ் மக்களை ஏமாற்றி விட்டது என்று வைக்கும் குற்றச்சாட்டு நியாயமானது தானே ?

ஆ.சங்கரி: இது நியாயமான குற்றச்சாட்டல்ல. அது அன்றைக்கு காலத்தின் கட்டாயம். அப்படி ஒரு அழுத்தத்தை அரசுக்கு வழங்கி எப்படியோ எங்கள் பிரச்சினையைத் தீர்த்து வைக்க எடுத்த முடிவு அது. இதெல்லாம் அரசியலில் பெரிய குற்றமாகச் சொல்ல முடியாது. காலத்துக்கு காலம் சூழ்நிலை மாறும்.

தேசம்: அன்று இளைஞர்களைத் தூண்டியது தானே இன்று இவ்வளவு மோசமான சூழ்நிலையை எற்படுத்தி உள்ளது.

ஆ.சங்கரி: கூட்டணியா தூண்டினது போய் அடியுங்கோ என்று.

தேசம்: ஆரம்பத்தில் இடம்பெற்ற துரையப்பா, தியாகராஜா போன்றவர்களின் படுகொலைகளின் பின்னணியில் கூட்டணியின் தூண்டுதல் இருந்ததாக நம்பப்படுகிறது. கூட்டணியின் கரங்களிலும் இரத்தக்கறை உள்ளது.

ஆ.சங்கரி: அப்படிச் சொல்லேலாது தம்பி. துரையப்பா இறந்தவுடன் நான் வாதடினனான் எங்கட தலைவர்கள் இறுதிச் சடங்கிற்குச் செல்ல வேண்டும் என்று.

தேசம்: நீங்கள் வாதடினீர்கள். ஆனால் உங்கள் கட்சி கூட்டணி அதைக் கண்டிக்கவே இல்லையே ?

ஆ.சங்கரி: கூட்டணி அதை கண்டிக்கவில்லை மட்டுமல்ல குற்றம்சாட்டப்பட்வர்களுக்காக வழக்கும் பேசியிருக்கிறார்கள். இப்படியான தப்பான செயல்கள் தப்பான எண்ணத்தை வளர்த்துத்தான் இருக்கிறது. மறுக்க ஏலாது. மறுக்க முடியாத உண்மை. அன்றைக்கு துரையப்பாவின் கொலையை கண்டித்து இருந்தால் இன்றைக்கு எத்தினை தலைவர்கள் உயிரோடு இருந்திருப்பார்கள்.

தேசம்: விடுதலைப் புலிகள் அமைப்பும் அதன் தலைமையும் ஆரம்பம் முதல் இன்று வரை கொள்கை மற்றும் செயற்பாட்டளவில் பாரிய மாற்றத்தை கொண்டிருக்கவில்லை. ஆனால் அவர்கள் பற்றிய உங்கள் நிலைப்பாடு காலத்திற்கு காலம் மாறியுள்ளது. வி.புலிகளை வளர்த்துவிட்டதில் கூட்டணிக்கு முக்கிய பங்கு இருந்தது. அதன் பின்னர் வி.புலிகளுடனான கூட்டணியின் உறவு முறிந்தது. அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சிவபாலன், திருமதி யோகேஸ்வரன் போன்ற கூட்டணித் தலைவர்கள் வி.புலிகளால் கொலை செய்யப்பட்டனர். அதன் பின்னர் நீங்கள் வி.புலிகளின் தலைவருடன் விருந்துண்டிர்கள். இப்போது உங்கள் நாட்கள் எண்ணப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏன் இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் தளம்பல் ?

ஆ.சங்கரி: ஒரு தளம்பலும் இல்லை. நிலைப்பாட்டிலும் மாற்றம் இல்லை. நான் வி.புலிகளை என்றைக்கும் ஆதரித்தவனல்ல. இன்றைக்கும் ஆதரித்தவன் அல்ல. இடையில் அது தளம்பலல்ல. அதுக்கு ஒரு விளக்கம் தர வேண்டும். வி.புலிகள் ஒரு நான்கு மாதம் ஒரு தலைப்பட்சமாக யுத்த நிறுத்தத்தைச் செய்திருந்தார்கள். அந்த ஆண்டு. 12 பாராளுமன்ற உரைகளில் வி.புலிகளை ஆதரித்து அல்ல வி.புலிகளுடன் பேசும்படி சொல்லியிருந்தேன். அது தளம்பல் நிலையல்ல. அழிவுகளைச் செய்து கொண்டிருக்கும் யானையை பிடித்து கட்டு என்று சொல்வது யானைக்கு support என்றா அர்த்தம் ?

தேசம்: தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆரம்ப கட்டத்தில் நீங்கள் அதை ஏற்றுக் கொண்டனீர்கள் தானே ?

ஆ.சங்கரி: தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ஒன்று சேர்ந்தனாங்களேயொழிய இவர்களை ஏகபிரதிநிதிகள் என்று ஏற்ற நாங்களா? அது தானே எனக்கும் அவைக்கும் பிரச்சினை. விநாயகமூர்த்தி தான் வி.புலிகளை ஏகபிரதிநிதியாக ஏற்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தது. அதை யாரும் ஏற்கவில்லை. கொங்கிரஸ் ஏற்கவில்லை. ரியுஎல்எவ் ஏற்கவில்லை. ரெலோவும் ஏற்கவில்லை. ஆனால் பேச்சுவார்த்தை நடத்துவதாக இருந்தால் புலிகளுடன் தான் பேசவேண்டும் சமகாலத்தில் வேறுயாருடனும் வேறு கட்சிகளுடன் பேசக் கூடாது என்பது தான் முடிவு. இதன் அர்த்தம் ஏகபிரதிநிதி என்பதல்ல.

தேசம்: அரசாங்கம் வி.புலிகளுடன் மட்டும் பேச்சுவார்த்தை நடத்துவதை இப்போதும் நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா ?

ஆ.சங்கரி: அவர்களோடு பேச வேண்டும் என்று சொல்கிறேன் என்றால் அவர்கள் நாங்கள் கேட்பதிலும் குறைவாகக் கேட்கமாட்டார்கள். அவர்களோடு பேசி ஒரு முடிவு வந்தால் எங்களுக்கு திருப்திதான். அரசாங்கம் வி.புலிகளுடன் பேசி ஒரு தீர்வைக் காணட்டும். ஆனால் அவையுடன் மட்டும் ஒப்பந்தம் செய்து பாரம் கொடுக்க முடியாது. அவர்கள் எங்கள் மக்களை அடிமையாக வைத்துள்ளார்கள்.

தேசம்: வி.புலிகளுக்கு எதிரான ஒரு சிறுபான்மை அணி உங்களுடைய தலைமையிலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையிலும் பிளவுபட்டு உள்ளது. நீங்கள் இருவருமே வெவ்வேறு தீர்வுத் திட்டங்களையும் வைத்துள்ளீர்கள் ?

ஆ.சங்கரி: டக்ளசுடைய தீர்வுத் திட்டம் பற்றி எனக்குத் தெரியாது. என்னுடைய தீர்வுத் திட்டம் வட்டு வரைக்கும் போயாச்சுது. இனி தேங்காயில் கை வைப்பது தான். அது பற்றி வேறெதுவும் சொல்ல விரும்பவில்லை. நானல்ல அரசாங்கமே சமஸ்டி என்று பேசத் தொடங்கிவிட்டது வட்டுவரைக்கும் போய்விட்டது. தேங்காய் புடுங்கிறதா இறங்கி வாறதா என்றது தான் கேள்வி.

தேசம்: வன்முறையற்ற போக்குகளுக்காக யுனெஸ்கோ விருது வழங்கப்பட்டு உள்ளது. ஆனால் இந்திய இராணுவம் வடக்கு கிழக்கில் இருந்த காலத்தில் மோசமான முறையில் மனித உரிமை மீறல்களை மேற்கொண்ட ஈஎன்டிஎல்எப் உடன் நீங்கள் தொடர்பு உடையவராக உள்ளதாக குற்றம்சாட்டப்படுகிறதே ?

ஆ.சங்கரி: ஈஎன்டிஎல்எப் கிளிநொச்சியை தளமாகக் கொண்டு இயங்கும் அமைப்பு. பிரபாகரன் வருத்தம் வரும் பொழுது அங்குதான் வந்து வைத்தியம் செய்கிறவர். அதனால் அவருக்கு என்னை இணைத்துப் பேசுவதில் ஒரு மகிழ்ச்சி. எனக்கு எல்லாம் ஒன்றுதான். நான் கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்தனான். எனக்கு அவர்களைத் தெரியும். அவர்களுக்கு என்னைத் தெரியும். ஆயுதங்களைக் களைந்து வந்தவர்கள் எல்லோருடனும் எனக்கு அரசியல் தொடர்புகள் இருக்கிறது.

தேசம்: இடதுசாரிப் போக்குடைய வலதுசாரிக் கட்சியென நீங்கள் கூறும் தமிழர் விடுதலைக் கூட்டணி சாதிய போராட்டங்களிலும் முற்போக்கான நிலைப்பாடுகளை எடுக்கவில்லை. கம்யூனிஸ்ட் கட்சிகளின் செயற்பாடுகளை கூட்டணி கடுமையாக விமர்சித்தது. இடதுசாரித் தளத்தில் இருந்து வந்த நீங்கள் இவற்றுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் ?

ஆ.சங்கரி: என்னத்திலை.....

தேசம்: சங்கானை நிச்சாமத்தில் நடந்த சாதிய போராட்டத்தில் கூட்டணியின் நிலைப்பாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"அன்றைக்கு துரையப்பாவின் கொலையை கண்டித்து இருந்தால் இன்றைக்கு எத்தினை தலைவர்கள் உயிரோடு இருந்திருப்பார்கள்."**

படுமோசமானதாகவே இருந்தது. முதலாவது ஆயுதுப் போராட்டம் நிச்சாமத்திலேயே நடந்தது. அதனை இலங்கை ஒரு வியட்நாம் ஆக்கப்படுவதாக கூட்டணியின் முன்னணித் தலைவரான அ அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

ஆ.சங்கரி: நீங்கள் குறிப்பிடும் சம்பவம் எனக்குத் தெரியாது. நாங்கள் சாதிப் பிரச்சினையை இல்லாமல் செய்வதற்காகவே சமபந்தி போசனம், ஆலயப் பிரவேசம் போன்ற போராட்டங்ளை நடத்தினோம்.

தேசம்: தமிழர் விடுதலைக் கூட்டணி சாதியப் போராட்டத்தை ஒரு சமூக சீர்திருத்தமாகவே அணுகியது. ஆனால் கம்னியுஸ்ட் கட்சி சாதிய ஒடுக்கு முறைக்கு எதிராக தீவிர போக்கை கொண்டிருந்தது.

ஆ.சங்கரி: சாதியப் பிரச்சினையைப் பொறுத்த வரை நான் முழுவதும் கொம்னியுஸ்ட் கட்சியின் நிலைப்பாடு தான். அந்தநாள் தொடக்கம். மற்றவர்கள் என்ன நிலைப்பாடு எடுத்தார்கள் என்று தெரியவில்லை. என்னைப் பொறுத்தவரை கொம்னியுஸ்ட் நிலைப்பாடு.



தேசம்: வி.புலிகளின் தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை பற்றிய உங்களுடைய அபிப்பிராயம் என்ன ?

அ.சஙிகரி: இவ்வளவு நடந்ததன் பிறகும், தமிழ், சிங்களம், முஸ்லீம் என இவ்வளவு பேருடைய மரணத்திற்கும் காரணமான பின், கல்விமான்களையும் அழித்து விட்டு இன்றைக்கும் அசையாமல் நின்றுதான் பெரிய தியாகம் செய்ததாகவும் தான் ஒரு வரலாற்றுப் போராட்டத்தை நடத்துவதாகவும் பிரபாகரன் கூறுவது, மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பதற்கான வழியே ஒழிய தன்னுடைய குற்றத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை. ☑

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான ஆனந்தசங்கரி அவர்களை நவம்பர் 30, 2006ல் பிரித்தானியா லூசியத்தில் உள்ள அவரது மகளின் இல்லத்தில் இரவு பதினொரு மணியளவில் சந்தித்தோம். சறம் சேட் என சாதாரண உடையில் நித்திரைக்குச் செல்லத் தயாராய் இருந்தவர் எமது கேள்விகளுக்கு அரசியல் வித்தகத்தனத்துடன் இல்லாமல் நேரடியாகவே பதிலளித்தார்.

ஆனந்தசங்கரி அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் பலரும் அரசியல் வன்முறைக்கு பலியாகி உள்ளனர். இவரது இளைய சகோதரர் ஞானசங்கரி வி.புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார். ஞானசங்கரியின் புதல்வர்கள் வி.புலிகளால் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர். மற்றுமொரு சகோதரரும் தென்மராட்சி பிரஜைகள் குழுத்தலைவருமான இராஜசங்கரி இந்தியப் படைகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவரை கௌரவித்து வி.புலிகள் நாட்டுப்பற்றாளர் விருது வழங்கினர். மூத்த சகோதரரான பரதசங்கரியின் மகள் சயனுஜா லண்டன் சுரங்க ரெயில் குண்டு வெடிப்பில் உயிரிழந்தார். இப்போது ஆனந்தசங்கரி அவர்களும் தனது நாட்களை எண்ணிக் கொண்டே உள்ளார்.

சுதந்திரத்தின் பின்னான இலங்கைத் தமிழரின் அரசியல் வரலாற்றில் ஆனந்தசங்கரி அவர்களுக்கு குறிப்பிடத்தக்க பங்கு உள்ளது. அந்த வகையில் இந்த நேர்காணல் தேசம் வாசகர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்று நம்புகிறோம். உங்கள் கருத்தக்கள் வரவேற்கப்படும். நன்றி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# துருக்கிமினிஸ்தானின் சர்வதிகாரியின் மரணம்

ஆறு கோடி மக்களைக் கொண்ட துருக்கிய வம்சாவழியினரைக் கொண்டது துருக்கிமினிஸ்தான். இது முன்னைநாள் சோவியத் கூட்டரசின் அங்கமும், வடக்கே உஸ்பெக்கிஸ்தான், கசகஸ்த்தான் நாடுகளாலும் தென் கிழக்கில் அப்கனிஸ்தானாலும், தெற்கே ஈரானாலும், மேற்கே கஸ்பியன் கடலாலும் சூழப்பட்ட பிரதேசமாகும்.



அதன் தான்தோன்றித் தலைவர்தான் சபர்முரத் நியாசோவ் (Saparmurat Niyasov). 1991 ஆண்டில் சோவியத் அணி உடைந்தபின் விடுதலை பெற்ற நாடுகளுள் ஒன்றான துருக்கிமினிஸ்தானின் ஜனாதிபதியாக ஏதேச்சதிகாரத்தில் பதவிக்கு வந்த நியாசோவ் 1999 இல் தன்னை வாழ் நாள் பூரான ஜனாதிபதியாக்கிக் கொண்டார். 1940 களில் பிறந்த இந்த மனிதன் அன்று அனுமதிக்கப்பட்ட ஒரே ஒரு அரசியல் அமைப்பான துருக்கிமினிஸ்தான் பொதுவுடமைக் கட்சியில் சேர்ந்து தனது அரசியல் போட்டிதாரிகளை எல்லாப் புறங்களிலும் தள்ளிக் கழிவு செய்துவிட்டு, அதன் செயலாளராகவும் பொறுப்பெடுத்துக் கொண்டான் இத் தரணிகாணாத் தலைவன்.

தன் புகழ் பாடுவதில் விருப்பு நிறைந்தவனாக இருந்தபோதிலும், அப்புகழை மற்றவர் வாய்களிலிருந்து கறப்பதில் பெரு நாட்டம் கொண்டவனாகவும் இவன் காணப்பட்டான். இவன் பெயர்பால் பயந்தே சீவனம் செய்பவர்களும், பயத்தால் ஆதரவு காட்டுபவர்களையும் கொண்டதே துருக்கிமினிஸ்தான் என்று கிண்டலாக அயல் நாட்டவர் கூறுவது வழக்கம்.

இவன் பிறந்த நாட்டில் கல்விக் கூடங்களில் இவனது வார்த்தைகளையே பாடபோதனைகளாக கற்பிக்கப்படுகின்றன. இவனது சிந்தனையிலேயே கல்வியின் முழுப் பாடங்களும் வரைவு செய்யப்பட்டுள்ளன. இவனைப் போன்ற வீரனோ தீரனோ அங்கே இல்லை, துருக்கிமினிஸ்தானில் வாழும் மக்களுக்கு மட்டுமல்ல, துருக்கி மொழி




பேசும் உலகளாவிய சகலருக்குமே இவன்தான் தலைவன், பாதுகாவலன் என்று தான் கூறியது மல்லாமல், தனது ஆதரவாளர்கள் யாவரையுமே கூறவைத்த பெருமையும் இவனுக்குச் சாரும்.

இவனது பிறந்த நாளினை மாகாவீரன் தினமாகக் கொண்டாடுவது, துருக்கிமிஸ்தானில் வருடாந்த நிகழ்வாக அனுஸ்டிக்கப்பட்ட வருகிறது. இந்த நாள் அங்கு ஒரு அரச விடுதலை நாளாகவும், அந்நாட்டு மக்கள் விடுதலை கண்ட நாளாகவும் பிரகடனம் செய்யப்பட்டும் உள்ளது.

தன்னை மக்கள் –தலைவன், கடவுளின் அவதாரம், துருக்கியரின் இரட்சகன், துருக்கிய வீரத்தேவனார் என்றெல்லாம் வர்ணித்துக் கொண்ட இந்த சர்வாதிகாரி, தனது மக்களது தொடக்கம், வாழ்வு, வாழ்கை வழி முறை என்ற குறிப்புகளைக் கொண்ட புத்தகத்தையும் (பெயர்: ரூனமா) தனது ஆதரவாளருடாக எழுதிப் பிரசுரித்ததுடன் நின்றிடாது, சகல மக்களும் அதன் ஒவ்வொரு பிரதியை கைவசம் கொண்டிருக்க வேண்டும் என்ற உத்தரவையும் இட்டிருந்தான்.

இவன் காலத்துக்குக் காலம் கொண்டு வரும் சட்டங்களெல்லாம் · அவனுடைய தனிப்பட்ட வாழ்கையுடன் தொடர்புபட்டது என்பதை அவனை அண்டி வாழ்பவர்கள் இரகசியமாக சுட்டிக்காட்டுவது வழக்கம். உதாரணத்துக்கு, தனது 60ம் வயதுடன் இருதய நோய்க்கு உட்பட்ட இவன், உடனடியாகவே யாரும் பொது இடங்களில் புகைபிடிக்கக் கூடாது என சட்டம் இட்டதை எடுத்துக் கொள்ளலாம். இதனைவிட, எப்போது யார் எப்படியான உறவினை யாருடன் வைத்துக் கொள்ளலாம் என்றெல்லாம் சட்டமிடுவதும் இவனது பழக்கம்.

தனது மரணச் சடங்கிற்க்கு சகல மக்களும் வந்துவிடவேண்டும் என்ற உத்தரவையே அவன் கடைசிச் சட்டமாக பிறப்பித்துவிட்டுச் சென்றிருப்பான் என்பது நிச்சயம். ☑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


## வோல்தம்ஸரோ கற்பக விநாயகர் ஆலயம்

**2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX**

# வசந்த நவராத்திரி உற்சவம்

**18.03.2007 லட்சஅர்ச்சணை**

**காலை 7.00 - மாலை 7.00**

**19.03.2007 - 26.03.2007**

**மாலை 5.30க்கு அபிஷேகம்**

**மாலை 7.30 - 8.30**

**கலைமாமணி டாக்டர் சாரதா நம்பியாரின்**
**இசைப்பேருரை**

**27.03.2007 அம்பாள் தேர்த்திருவிழா**

**மாலை 7.30 - 9.00**

**ஆலயத்தை சுற்றியுள்ள வீதிகளில்**

**அம்பாள் தேரில் ஊர்வலம்**

## காயத்திரி பிரம்ம யாகம்

**எமது ஆலயத்தில் மாதம் ஒருமுறை**
**ஞாயிற்றுக்கிழமைகளில் காயத்திரி அம்பாளின்**
**பிரம்மயாகம் காயத்திரி ஜபத்துடன்**
**நடைபெறுகின்றது.**

**திகதிகள்: மார்ச் 4. ஏப்ரல் 3. மே 13. யூன் 10. யூலை 8. ஒகஸ்ற் 3. செப்ரம்பர் 30. ஒக்ரோபர் 7. நவம்பர் 4. டிசம்பர் 30.**


**நேரம் காலை 10.00 மணி முதல் மதியம் 1.00 மணி**

# Tel : 020 8527 3819




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்திய விவசாயிகள் பலருக்கு யமனாக வந்த பல விருதுகள் பெற்ற விஞ்ஞானி எம் எஸ் சுவாமிநாதன்

# உற்பத்தி அரசியல்

## இந்திய விவசாயிகளைக் கொள்ளையடிக்கும் பன்னாட்டு நிறுவனங்களும் விலைபோகும் உள்நாட்டு விஞ்ஞானிகளும்

ச வேலு

பசுமைப் புரட்சி தோல்வியடைந்து விட்டதால் உயிரியல் தொழில்நுட்பத்தின் மூலம் இன்று பன்னாட்டு நிறுவனங்கள் உலகம் முழுவதிலும் வேளாண்மையைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கின்றன. புதுக்காலனிய சுரண்டலுக்கான கருவிகளாக நவீன அறிவியலும் தொழில் நுட்பமும் மாற்றப்பட்டுள்ளன. பல அறிவியல் கூடங்களும், அமைப்புகளும், விஞ்ஞானிகளும் பன்னாட்டு நிறுவனங்களின் நிதியைப் பெறுவதற்கு அவற்றின் கட்டளைக்கு அடிபணிந்துவிட்டன.

பசுமைப் புரட்சியை இந்தியாவில் கொண்டு வந்ததற்காக எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு 1987ம் ஆண்டு நார்மன் போர்லாக் உருவாக்கிய உலக உணவு பரிசு அமைப்பு (World Food Prize Foundation) தனது உலக உணவுப் பரிசுத்தொகையான ஒரு கோடி ருபாவை வழங்கியது. உணவு ஆய்வுக்காக வழங்கப்படும் இவ்விருது நோபல் பரிசுக்கு இணையானது என்றும் அறிவிக்கப்பட்டது. இவ்வமைப்பின் ஆலோசனைக்குழுவில் இன்றைய அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ், முன்னாள் அதிபர் ஜிம்மி கார்ட்டர், உலக வங்கியின் ரோபர்ட் மக்னமாரா மற்றும் ரொக்.'.பெல்லர் பவுண்டேஷனின் பிரதிநிதி போன்றோரும் உள்ளனர். இந்தப் பணத்தில் தான் சென்னை தரமணியில் MSSRF (அருகில் சின்னம்) என்ற எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் என்று தனது பெயரிலேயே விவசாய ஆய்வு மையத்தைத் தொடங்கினார்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு இலக்கை அடையவும் எதிர்காலத்தில் மக்களின் பசியைப் போக்க உயிரியல் தொழில்நுட்பத்தை குறிப்பாக மரபீனி மாற்று தொழில்நுட்பத்தைப் (genetically modifying technology) பயன்படுத்த வேண்டும் என்று எம் எஸ் சுவாமிநாதன் கூறி வருகிறார். ஆனால் உலக அளவில் பன்னாட்டு நிறுவனங்களுக்கு விலைபோகாத சில விஞ்ஞானிகள் மரபீனி மாற்று பயிர்களின் பயங்கர விளைவுகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து உள்ளனர். 1998இல் உயிர்ம வேதியலில் (bio chemistry) 35 ஆண்டுக்கால ஆய்வு அனுபவம் மிக்க முனைவர் அர்பட் புஷ்டய் என்ற பிரித்தானிய விஞ்ஞானி மரபீனி மாற்றம் செய்யப்பட்ட உருளைக் கிழங்கை உண்ட எலிகளின் நோய் எதிர்ப்பாற்றல் பாதிப்புக்குள்ளாகி அவற்றின் உடல்வளர்ச்சி தடைப்படுகின்றது என்பதைக் கண்டறிந்தார். அவரது ஆய்வறிக்கை Lancet என்ற மருத்துவ ஆய்விதழில் வெளியிடப்பட்டது. இவ்வறிக்கை வெளிவந்தபின் இவர் ஆய்வுப்பணியாற்றிய ரவுலட் கழகம் இவரது வேலையைப் பறித்தது. இதன் காரணம், இவ்வாய்வுக்கழகத்திற்கு பெரும்பாலான தொகையை மான்சாண்டோ நிறுவனத்திடம் இருந்து பெறப்பட்டதென்பது பின்னர் தெரியவந்தது.

புஷ்டய்க்கு ஆதரவாக PSRAST என்ற அறிவியலையும் தொழில்நுட்பத்தையும் பொறுப்புடன் பயன்படுத்துவதற்கான மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் அமைப்பு (Physicians and Scientists for Responsible Application of Science



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

and Technology) முனைவர் புஷ்டய்யின் ஆய்வு முடிவுகள் சரியானவையே என்ற அறிவித்தது.




மேலும் அதன் அறிக்கையில் "இத்தொழில்நுட்பம் அணுக்கதிர்வீச்சை விடவும் ஆபத்தானது. ஓர் இடத்தில் கதிரியக்கம் தீவிரமும் கசிவும் ஏற்பட்டுள்ள இடத்தில் மட்டுமே அதிகமாக இருக்கும். அதன் தீவிரமும் தாக்கமும் நாட்பட, நாட்பட குறைந்து கொண்டே வரும். ஆனால் மரபீனி மாற்றத் தொழில்நுட்பத்தின் விளைவுகளை உடனுக்குடன் கண்டறிய முடியாது. மரபீனிகள் கதிரியக்கத்தைப் போல் மெல்ல மெல்ல அழிவதில்லை. அவை நீடித்திருந்து மிகவும் கொடிய, கண்டறியமுடியாத பாதிப்புகளை உண்டாக்கும்.

மரபீனி மாற்றுப் பயிர்கள் genetically modified organism வெளியிடும் மரபீனிகளால் மனிதர்களுக்கும், இயற்கைக்கும் உண்டாகக்கூடிய பாதிப்புகள் மாற்றத்தக்கவையோ செப்பனிடக்கூடியவையோ அல்ல என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்" என PSRAST அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

தனது விலைபோகாத தொழில்நுட்பத்தை, மூன்றாம் உலக நாடுகளில் குறிப்பாக இந்தியாவில் விற்பதில் மான்சாண்டோ நிறுவனம் வெற்றி பெற்று உள்ளது. (வியட்நாம் போரில் பயன்படுத்தப்பட்ட ஏஜென்ட் ஒரேஞ்ஜ் என்ற களைக் கொல்லியை இந்நிறுவனமே தயாரித்தது. இக்களை கொல்லியைப் பயன்படுத்தியே வியட்நாமின் மொத்த வனப்பரப்பில் 14 வீதம் அழிக்கப்பட்டது. 50 வீதம் மாங்குரோவ் காடுகளும் அழிந்தன. 4 லட்சம் வியட்நாமியர் உடல் பாதிப்புக்கு உள்ளாகினர். 5 லட்சத்திற்கு மேற்பட்ட குழந்தைகள் பிறவிக் குறைபாடுகளுடன் பிறந்துள்ளனர்.)




மான்சாண்டோ மராட்டிய மாநிலத்திலுள்ள மகைகோ (Mahyco) என்ற விதை வளர்ப்பு மற்றும் விற்பனை செய்யும் நிறுவனத்தின் 50வீதம் பங்கை வாங்கியுள்ளது. இந்த நிறுவனத்தின் வழியாக 1998ம் ஆண்டு முதல் மரபீனி மாற்றம் செய்யப்பட்ட BT பருத்தியை (Bacillus Thuningiensis) தமிழ்நாடு உட்பட 9 மாநிலங்களில் பரிசோதனைக்காக பயிர்செய்யத் தொடங்கிவிட்டது.

இதில் வெட்கக்கேடான விடயம் என்னவென்றால் மான்சாண்டோ சோதனை முறையில் பயிர் செய்வதற்கான அனுமதியை மத்திய அரசின் மரபீனி மாற்றுத் தொழில்நுட்பங்களுக்கு ஒப்புதல் தரும்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அமைப்பிலிருந்து (GEAC – Genetic Engineering Approval Committee) முறையாகப் பெறவில்லை. இத்தகைய சோதனைப் பயிர்வளர்ப்புக்கள் திருட்டுத் தனமாக நடந்தேறின.

BT பருத்தியால் கடன்சுமை அதிகமாகி ஆந்திரா, கர்நாடகாவிலும், தற்போது மராட்டியத்தின் விதர்ப்பா மாவட்டத்திலும் பருத்தி விவசாயிகளின் தற்கொலைகள் அதிகரித்திருக்கின்றன.

மான்சாண்டோவின் கட்டளைக்கு விஞ்ஞானிகளும் மத்திய, மாநில அரசுகளும் அடிபணிந்துவிட்டன. சமூக அக்கறையற்று பணத்திற்காக செய்தி ஊடகங்களும் BT பருத்தியை விளம்பரப்படுத்தின.

1987ஆம் ஆண்டு எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு வழங்கப்பட்ட உலக உணவுப் பரிசு, மகைகோ, மான்சாண்டோ நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பார்வலேக்கு 1998ம் ஆண்டில் வழங்கப்பட்டது. பார்வலேயின் மகன் முனைவர் உஷா பார்வலே இந்த நிறுவனத்தின் ஆராய்ச்சிக்கான இயக்குநராக இருக்கிறார். மான்சாண்டோ நிறுவனத்தின் தலைமை நிர்வாகியான ஹக் கிராண்ட் (Hugh Grant) அறங்காவலராக உள்ள பன்னாட்டு அமைப்பில் உஷா பார்வலேயும் அறங்காவலராக இருக்கிறார்.

உஷா பார்வலே சென்னையில் உள்ள எம்.எஸ்.சுவாமிநாதன் பெயரிலுள்ள MSSRF அறக்கட்டளையிலும் உறுப்பினராக இருக்கிறார். மான்சாண்டோ பிரதிநிதியைத் தன் அறக்கட்டளையில் உறுப்பினராகக்கொண்ட எம்.எஸ்.சுவாமிநாதனிடமே இந்தியாவின் எதிர்கால நிகழ்கால வேளாண்மைத் திட்டங்களைத் தீர்மானிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டு உள்ளது என்பது இந்தியாவுக்கு நேர்ந்துள்ள அவலமாகும்.

அறிவியல் உலகில் மிகவும் மதிப்புமிக்க New Scientist என்ற ஆய்விதழ் முதன்மை உணவு விஞ்ஞானி பொய்யான தகவல்களை வெளியிடுகின்றார் (Top Food Scientist Publishes False Data) என்ற தலைப்பில் எம்.எஸ்.சுவாமிநாதனின் ஆய்வுகள் குறித்து 1974ஆம் ஆண்டு இரண்டு பக்கக் கட்டுரையினை வெளியிட்டுள்ளது.

1960களில் மெக்சிக்கோ நாட்டு நார்மன் போர்லாக் உருவாக்கிய குட்டைரக கோதுமை வித்தான சனோராவின் புரதச்சத்தை - அவ்விதைகளைக் கதிர்வீச்சுக்கு உட்படுத்தி அதிகரித்து விட்டதாக எம்.எஸ்.சுவாமிநாதன் ஆய்வு அறிக்கையொன்றை வெளியிட்டார். கதிர்வீச்சுக்கு உட்படுத்தப்படுவதால் சனோராவின் புரதச்சத்து அதிகரிக்கவில்லை எனவும், எம்.எஸ்.சுவாமிநாதனின் ஆய்வறிக்கை தவறானது எனவும் இரண்டு ஆய்வு நிறுவனங்கள் நிரூபித்துள்ளன. மெக்சிக்கோவின் ஆய்வுநிறுவனமான CIMMYTயும் எம்.எஸ். சுவாமிநாதனின் ஆய்வின் முடிவுகள் தவறானவை என அறிக்கைவிடுத்துள்ளது.




தவறான ஆய்வு முடிவுகளையே எம்.எஸ். சுவாமிநாதன் திரும்பத் திரும்பக் கூறிவந்தார் என்பதை நியூ சயன்டிஸ்ட் இதழ் சுட்டிக் காட்டுகின்றது. தவறானது என்று நிருபிக்கப்பட்ட ஆய்வின் முடிவுகளை துணிச்சலுடன் திரும்பத் திரும்பக் கூறிவந்த பன்னாட்டு நிறுவனங்களின் நம்பிக்கைக்கு உரிய விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதனுக்கு 1999 இல் வேர்வோ சுற்றுச் சூழல் விருதும் (கொலம்பியா), ஒருகோடி ரூபாவும், சுற்றுச் சூழல் திட்ட அமைப்பு (UNDP) 1994ம் ஆண்டு சுற்றுச் சூழல் பாதுகாப்பிற்கான சக்ஷாவா விருதையும் ஒருகோடி ரூபாவையும் வழங்கியள்ளது.

இன்னும் பல பரிசுகள் இவருக்கு வழங்கப்படவுள்ளன. உயிரியல் தொழில்நுட்பத்தை இந்தியாவில் நுழைப்பதற்காக! ☑

பயன்படுத்தப்பட்ட நூல்கள்:

1. புதுக்காலனிய சுரண்டலின் புது வடிவம் - வான்முகில் (புனைபெயரில் எழுதிவரும் கல்பாக்க அணுஉலை விஞ்ஞானி) த.க.பொ.மலர் 2006.
2. People's March, September 2006
3. இந்திய விவசாயிகளும் கடன்சுமையும், புதுவை ஞானம்.
4. Aspects of India's Economy – 32/ January 2002.

## GENETICALLY MODIFIED PLANT or ORGANISM

Given the huge complexity of genetic coding, even in very simple organisms such as bacteria, no one can possibly predict the effects of introducing new genes into any organism or plant.

This is because:

The transposed gene may act differently when working within its new host

The original genetic intelligence of the host will be disrupted

The new combination of the host genes and the transposed gene will have unpredictable effects; and therefore.

There is no way of knowing the overall, long-term effect of these foods on the health of those who eat them.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

# Rengan N Devarajan

## SOLICITORS



**Immigration & Nationality**

**Employment**

**Landlord & Tenant**

**Housing**

**Welfare Benefits**

**Matrimonial**

**1st Floor**
**128 Ilford Lane, Ilford**
**Essex, IG1 2LE**

**Tel : 020 8478 5797**
**Fax : 020 8478 4486**



IOM International Organization for Migration

21 Westminster Palace Gardens
Artillery Row, London SW1P 1RR
tel: 0800 783 2332
Fax: 020 7233 3001
www.iomlondon.org

## நீங்கள் உங்கள் நாட்டுக்கு திரும்பிச் செல்வதைப் பற்றி எண்ணுகிறீர்களா ? எங்களுடன் பேசுங்கள். எங்களால் உங்களுக்கு உதவ முடியும்.

நாங்கள் உங்கள் விமானச் சீட்டைப் பெற்றுத் தருவோம்
நாங்கள் உங்களுக்கு இங்கும் அங்கும் ஏற்படும் உள்நாட்டு பயணச் செலவை வழங்குவோம்
நாங்கள் உங்களுக்கு வேண்டிய பயண ஆவணங்களைப் பெற்றுத்தர உதவுவோம்
நாங்கள் உங்களை வழியனுப்பி வைப்பதிலும் வரவேற்பதிலும் உதவுவோம்

## தஞ்சம்கோரியோர்

யு.கே இல் இருந்து உங்கள் நாட்டிற்கு சுயவிருப்பில் திரும்பிச் செல்வதற்கு

**31 மே 2007**

திகதிக்கு முன் விண்ணப்பித்தால்

**£3500**

பெறுமதியான மீள்இணைவு உதவியை திரும்பும் ஒவ்வொருவரும் பெறமுடியும்.

முக்கிய குறிப்பு : யூன் 2007ல் விண்ணப்பித்தால் இந்த உதவித் தொகை £2500 ஆக குறைக்கப்படும். யூன் 2007க்கு பின் வரை காத்திருந்து விண்ணப்பித்தால் உங்களுக்கு வழமையான ஒருவருக்கு £1000 பெறுமாதியான மீள்இணைவு உதவி மட்டுமே கிடைக்கும்.

மேலதிக விபரங்களுக்கு ஐ ஓ எம் இன் இலவச தொலைபேசி இலக்கத்திற்கு அழையுங்கள்

**0800 783 2332**

ஐ ஓ எம் ஒரு சுயாதீன சர்வதேச அமைப்பு. இது பிரித்தானிய அரசின் ஒரு பிரிவல்ல.
நீங்கள் விரும்பினால் மட்டுமே, நீங்கள் உங்கள் நாட்டுக்குத் திரும்பிச் செல்ல நாங்கள் உதவுவோம்.

This Programme is Co-funded by the European Union

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்